விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 02 செவ்வாய்க்கிழமை (17.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 334

## புலமைப்பரிசில் பரீட்சையில் வடக்கின் முன்னிலை பெறுபேறுகள்


சுபாஸ்கரன் ஜனுஸ்கா
198 புள்ளிகள்
(தெல்லிப்பழைமகாஜனா)


மு.அஸ்விகன்
196 புள்ளிகள்
(மு/பு.ஸ்ரீ.சு.வித்தி.)


ஜெ.அஸ்வின்யா
196 புள்ளிகள்
(வ.இ.ம.ம.வித்தி.)


ச.ஆர்வலன்
195 புள்ளிகள்
(யா.இ.ஆ.பாட.)


ம.மகிஷன்
195 புள்ளிகள்
(கொ.இ.ஆ.பாட.)


அ.அஜினி
195 புள்ளிகள்
(ஜோண் பொஸ்கோ)


ர.நிதுஷன்
195 புள்ளிகள்
(கிளி/த.அ.மி.த.பாட.)


றொசான்னா குரூஸ்
195 புள்ளிகள்
(ம.பு.ச.பெ.கல்லூரி)

# மாவீரர் நாளை நினைவுகூர முடியாது

## மீறினால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எச்சரிக்கை



*(கொழும்பு)* பயங்கரவாத அமைப்பில் இருந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்தி விட்டு உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையில் மாவீரர் தின நினைவேந்தலை நடத்துவதற்கு இடமளிக்க முடியாது. அதை மீறி நடத்தினால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

*(19ஆம் பக்கம் பார்க்க)*

### வடக்கு, கிழக்கில் மழையுடனான வானிலை தொடரும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட 14 மாவட்டங்களில் மழை வீழ்ச்சி அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் 19

### புலமைப்பரிசில் பரீட்சையில் 10 மாணவர்களுக்கு 200 புள்ளிகள்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளில் 10 மாணவர்கள் 200 புள்ளி களை பெற்றுள்ளனர்.

200 புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் அனைவரும் சிங் 19

### இறந்தவர்களின் உடலை
## வடக்குக்கு கொண்டுவர அனுமதி பெற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திற்கு வெளியே ஒருவர் மரணித்தால் உடலை வடக்கு மாகாணத்திற்கு கொண்டுவந்து இறுதிச் சடங்கை நடத்த 19

### இலங்கையின் புதிய அரசியலமைப்புக்கான
## மாற்று முன்மொழிவு நூல்

### மஹா சங்கத்தினால் பிரதமரிடம் கையளிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான புதிய அரசியலமைப்பிற்காக முன் வைக்கப்பட்ட மாற்று முன்மொழிவுகள் உள்ளடங்கிய 19

### நாட்டில் நேற்றும்
## +382 தொற்றாளர்

(கொழும்பு)

நாட்டில் நேற்று 19

## தனிமைப்படுத்தப்பட்ட பகுதியை விட்டு வெளியேறியவர்

### பொதுமக்களால் பொலித்தீன் பையால் சுற்றி கட்டி பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுவதற்கு பொதுமக்களிற்கு 19

## வவுனியாவில் பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்ட பெண் ஒரு வருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று திங் கட்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறி வித்துள்ளார். 19

## கொரோனாவால் நேற்றும் மூவர் மரணம்

### உயிரிழப்பு 61ஆக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் கொரோனாவால் நேற்றும் 3 பேர் உயிரிழந்துள்ள னர்.

இதன்மூலம் நாட் டில் கோவிட்-19 நோயால் 19

### கோப்பாயில் அலுவலகத்தினுள் காவலாளி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கோப்பாயி லுள்ள யாழ்.மாவ ட்ட சமூக சேவை 19

### 2021 வரவு செலவுத் திட்டம்
## பாராளுமன்றத்தில் இன்று முன்வைக்கிறார் மகிந்த

(கொழும்பு)

2021ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சேவை செலவினங் 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கேள்வி அறிவித்தல்
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.
### சபை நிதி – 2020

01. **தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** அவர்கள் தகுதிவாய்ந்த வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

02. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 4/2016(ii) இற்கமைவாகவும் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும். மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

05. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை ( தொலைபேசி : 021 205 0037, தொலைநகல் : 021 205 0036 )** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை **தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** என்னும் முகவரியில் **17.11.2020 ஆம் திகதியிலிருந்து 27.11.2020 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணி வரையும், 30.11.2020 ஆம் திகதி காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 14.00 மணிக்கும்** இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் **ரூபா 2000.00 (VAT நீங்கலாக)** செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06. விலைக் கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு **30.11.2020 ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு** முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் **கேள்விப் பெட்டியில்** இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் **பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை** என்னும் முகவரி யில் அமைந்துள்ள அலுவலகத்தில் **23.11.2020ஆம் திகதியன்று பிற்பகல் 14.00 மணிக்கு** நடைபெறும். இதில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ள முடியும்.

08. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. சமர்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

### கட்டுமானம்

| கேள்வி அடையாள இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகைVAT நீங்கலாக(Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/C.F/W/35/2020 | Construction of Library Building at Iththavil (Stage II) | 4.55 | 3 மாதம் | C8and C7 (கட்டுமானம்) | 80,000.00 | 01.03.2021 |

### வழங்கல்

| கேள்வி அடையாள இலக்கம் | வேலைவிபரம் | வீதிவிளக்குகளின் எண்ணிக்கை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/C.F/12/2020 | Supply of 50W LED Street Light at PachchillaipalliPradeshiya Sabah. | 430Nos±10% | 30,000.00 | 01.03.2021 |

10. தகைமையுடைய கேள்விதாரர் கட்டுமானம் அல்லது வழங்கல் தொடர்பான கேள்வி ஆவணங்களினை பெற்றுக்கொள்ள முடியும்.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக் குழு**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

(C-699)

## வீட்டாரை அச்சுறுத்தி கரணவாயில் கொள்ளை

(கரணவாய்)

வீடு ஒன்றினை உடைத்து உள்ளே நுழைந்த கொள்ளையர்கள் வீட்டாரை அச்சுறுத்தி அங்கிருந்த தங்க நகை மற்றும் ஒரு தொகை பணத்தை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரணவாய் தெற்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டை உடைத்து உள்ளே நுழைந்த 5 கொள்ளையர்கள் வீட்டாரை அச்சுறுத்தி அங்கிருந்த தங்க சங்கிலி ஒன்று, இரண்டு மோதிரம், ஒரு காப்பு, 5 ஆயிரத்து 300 ரூபாய் ரொக்கப் பணம் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் நேற்று மதியம் நெல்லியடி பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ம-03,60)

## யாழில் மழை காரணமாக 16 குடும்பங்களை சேர்ந்த 58 பேர் பாதிப்பு; 3 வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த இரு நாட்களாக காற்றுடன் கூடிய கனமழை பெய்துவரும் நிலையில் மாவட்டத்தில் 16 குடும்பங்களை சேர்ந்த 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் சூரியராஜ் கூறியுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதியிலிருந்து நேற்றைய தினம் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்பட்ட காற்றுடன் கூடிய மழையின் தாக்கத்தின் காரணமாக 16 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பத்து வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் மூன்று வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

நல்லூர், கோப்பாய் ,தெல்லிப்பளை, பருத்தித்துறை, சண்டிலிப்பாய் ,பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனர்த்தத்தினால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் பாதிப்புகள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(ம-03,33)

## வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொலிஸ், இராணுவம் குவிப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல வளாகம் சிரமதான பணிமூலம் துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்ல வளாகத்தை சூழ படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து இந்த துப்புரவு பணியினை முன்னெடுத்தனர்

இதன் போது வன்னிவிளாங்குளம் வீதி முழுவதும் பொலீஸார் மற்றும் படையினர் குவிக்கப்பட்டுள்ளதுடன் வீதியால் செல்பவர்களை விசாரிக்கும் நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

காலை முதல் நண்பகல் 1.00 மணிவரை நடைபெற்ற சிரமதான பணியின் போது சுகாதார விதிமுறைகளை பின்பற்றி சிரமதானத்தில் ஈடுபட்டாலும் சிரமதானம் முடியும் வரை வீதியில் படையினர் பொலிஸார் ஒளிப்படம் எடுத்து சிரமதான பணியில் ஈடுபட்டவர்களை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

(ம-03,281)

**மணமகள் தேவை**
88, ரேவதி, 7 இல் செவ்வாய், 58 பாவம், B.Sc. எஞ்சினியர் மணமகன் 81, பூரம், 4 இல் சூரியன் செவ்வாய், 21 பாவம், ஜேர்மன் சிற்றிசன் மணமகன்.
(4659)
**துர்க்கா திருமண சேவை**
**077 818 5978, 075 011 1122**

# புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்கள்

## மகப்பேற்று வைத்திய நிபுணராவதே என் இலட்சியம் (198 புள்ளிகள்)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி **சுபாஸ்கரன் ஜனுஸ்கா** 2020 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் **198** புள்ளிகளைப் பெற்று வடமாகாணத்தில் முதலிடத்தில் சித்தியடைந்துள்ளார்.

அவருடைய நேர்காணலின் போது அவர் தெரிவித்ததாவது,

புலமைப்பரிசில் பரீட்சையில் வடமாகாணத்தில் நான் முதலிடம் பெற்றுள்ளதாகக் கேள்விப்பட்டவுடனேயே நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன், பூரிப்படைந்தேன்.

மகப்பேற்று வைத்திய நிபுணராக வரவேண்டும் என்பதே என் எதிர்கால இலட்சியம்.

எனக்குச் சிறந்த பெறுபேறு கிடைப்பதற்கு எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய என் பெற்றோர், வகுப்பாசிரியர், எங்கள் கல்லூரி அதிபர், பிரதி அதிபர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி கூற விரும்புகின்றேன்.

மகப்பேற்று வைத்திய நிபுணராக வந்த பின்னர் போராலும், வறிய நிலையிலும் உள்ள பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று இலவச மருத்துவ சேவைகள் செய்ய வேண்டும் என ஆசைப்படுகின்றேன். அத் துடன் வறிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு கற்றலுக்கு உதவி செய்யவும் ஆர்வமாகவுள்ளேன் என தெரிவித்தார். (நி-4-18)

## வைத்தியராகி மக்களுக்கு சேவையாற்றுவதே என் விருப்பம் (196 புள்ளிகள்)



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித் தியாலயத்தின் மாணவி **அஸ்வின்யா ஜெயந்தன்** 2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் **196** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவருடைய நேர்காணலின் போது தெரிவித்ததாவது,

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற பெருமை என்னை வழிகாட்டிய எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், எனது பெற்றோர், அம்மம்மா மற்றும் என்னை வழிகாட்டிய ஏனைய ஆசிரியர்களையேசாரும். கொரோனா விடுமுறைக் காலத் திலும் கடந்த கால வினாக்கள் மற்றும் பயிற்சிகளை நிறையவே செய்தேன்.

அந்த முயற்சிக்கு கிடைத்த வெற்றியே இது. இதேபோல் மாணவர்கள் கடுமையாக பயிற்சி களைச் செய்து முயற்சி செய்தால் சிறந்த பெறு பேறுகளைப் பெற முடியும்.

எனது தாய், தந்தையர் வைத்தியர். அவர்கள் வவுனியா வைத்தியசாலையில் பணியாற்றுகின்றனர். அவர் களைப் போல் வைத்தியராகி மக்களுக்கு சேவை செய்வதே எனது இலக்கு என அந்த மாணவி மேலும் தெரிவித்துள்ளார். (நி-4-250)

## விமானியாக வருவதே எனது எதிர்கால இலட்சியம் (196 புள்ளிகள்)



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவன் **முரளிதரன் அஸ்விகன் 196** புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் நிலையை பெற்றுள்ளார். அவருடைய நேர்காணலின் போது,

விமானியாக வருவதே தன்னுடைய எதிர்கால இலட்சியம் எனவும் இந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெற்று மாவட்டத்தில் முதல் நிலை பெற்றமையால் மகிழ்ச்சி அடைவதாகவும் தன்னுடைய இந்த வெற்றிக்காக உழைத்த பெற்றோர், அதிபர், ஆசிரியர் சக மாணவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

கொரோனா வைரஸினுடைய தாக்கத்தின் மத்தியிலும் இணையவழி வகுப்புக்களை மேற்கொண்டு தம்மை ஊக்குவித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

எந்த ஒரு சூழ்நிலையிலும் ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் கல்வி கற்றால் எந்தவித சவால்களையும் வெல்ல முடியும் எனவும் குறித்த மாணவன் தெரிவித்துள்ளார். (நி-281)

## விமானியாவதே என் இலட்சியம் (195 புள்ளிகள்)



கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் **மதியழகன் மகிஷன்** 2020 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் **195** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

அவரை நேர்காணல் செய்த போது,

என் அம்மா, அப்பாவின் ஒத்துழைப்புக்களும் என் வகுப்பாசிரியரான நிஷந்தி ரீச்சர் மற்றும் சண் சுதர்சன் சேர், பாடசாலை அதிபர், உப அதிபர், பத்மநேசன் சேர், ஜெயக் காந்தன் சேர், சுந்தர் சேர் ஆகியோரின் ஒத்துழைப்புக்களும் சிறந்த பெறுபேறுகள் பெறுவதற்கு எனக்கு ஊக்குவிப்புக்களாக அமைந்தன.

அவர்கள் அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி கூற விரும்புகின்றேன்.

எனது எதிர்கால இலட்சியம் ஒரு விமானியாவது ஆகும். என் சிறு வயதிலிருந்தே இந்த ஆர்வம் எனக்குள்ளிருக்கிறது எனவும் சாதனை மாணவன் மேலும் தெரிவித்தார். (நி-4-18)

# கொரோனா வைரஸ் மூன்று நாட்கள் வரை உயிருடன் இருக்கும்-மருத்துவர் பாதெனிய

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் மூன்று தினங்கள் வரை மேற்பரப்பில் உயிருடன் இருக்கும் என்பதால், அது மனிதர்கள் மத்தியில் மிக விரைவாகப் பரவும் பெரிய ஆபத்து இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் அனுருத்த பாதெனிய தெரிவித்துள்ளார்.**

வேறு வைரஸ் கிருமிகளை போல் அல்லாது கொரோனா வைரஸ் கிருமி மூன்று தினங்கள் மேற்பரப்பில் உயிருடன் இருக்கும் என்பது மிகவும் பயங்கரமான நிலைமை.

இதன் காரணமாக அலுவலகங்கள், பொதுப் போக்குவரத்து வாகனங்கள் மட்டுமல்லாது வீடுகளை விட்டு வெளியில் இருக்கும் போது பொருட்கள் தொடுவது மற்றும் நபர்களுடன் நெருக்கமாக இருப்பதை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சவர்க்காரம் அல்லது கிருமித் தொற்று நீக்கி திரவங்களை பயன்படுத்தி அவ்வப் போது கைகளை கழுவுவதன் மூலம் தொற்றிலிருந்து தப்பிக்க முடியும்.

கொரோனா வைரஸ் தண்ணீர் மற்றும் மனிதக் கழிவுகள் மூலம் மனிதர்களின் உடல்களுக்கு செல்லும் ஆபத்து இருப்பது குறித்து எந்த ஆய்வுகளிலும் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என உலக சுகாதார அமைப்பும் தெரிவித்துள்ளது எனவும் மருத்துவர் பாதெனிய குறிப்பிட்டுள்ளார். (நி)

## கற்பித்தவர்களை நன்றியுடன் நினைவுகூருகிறேன்

# அஞ்ஜிதன் அஜினி

## (195 புள்ளிகள்)



புனித யோண்.பொஸ்கோ பாடசாலை மாணவி அஞ்ஜிதன் அஜினி 2020 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 195 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

அவருடைய நேர்காணலின் போது அவர் தெரிவித்ததாவது,

2020 ஆம்ஆண்டுபுலமைப்பரிசில் பரீட்சையில் 195 புள்ளிகள் பெற்றதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். முதலில் எல்லாம் வல்ல கடவுளுக்கு நன்றி கூறுகின்றேன். மேலும் சிறந்த பெறுபேற்றைப் பெற வழிப்படுத்திய முன்னாள் அதிபர் அருட்சகோதரி.மேரி.றொசாந்திக்கும் தற்போதைய அதிபர் அருட் சகோதரி. மேரி.அஞ்சலிக்காவுக்கும் உப அதிபர், பகுதித்தலைவர், வகுப்பாசிரியர் திருமதி.துஷயா ரகுமார், தரம் ஒன்றிலிருந்து கற்பித்த ஆசிரியர்கள், ஏனைய தரம் 5 ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (நி-4)

## பொறியியலாளராக வந்து மக்களுக்கு சேவையாற்றுவேன்

# சந்திரகுமார் ஆர்வலன்

## (195 புள்ளிகள்)



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் சந்திரகுமார் ஆர்வலன் 2020 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 195 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

நேர்காணலின் போது அவர் தெரிவித்ததாவது,

பொறியியலாளராக வந்து வடக்கு மக்களுக்கு சேவையாற்ற விரும்புகின்றேன்.

அதேபோல் இந்த பரீட்சையினை பொறுத்தவரைக்கும் பாடசாலை மற்றும் தனியார் வகுப்புக்கு சென்றாலும் வீட்டில் அதனை மீட்டுப் படிப்பதன் மூலமே பரீட்சையில் இலகுவாக சித்தி அடைய முடியும்.

அத்தோடு 195 புள்ளி பெறுவதற்கு உதவிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனது பெற்றோருக்கு தனது நன்றிகளையும் தெரிவித்தார். (நி-4-33)



## கிளி/தர்மபுரம் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ரவீந்திரன் நிதுஷன் - 195 புள்ளிகள்

## வைத்தியராகி சேவையாற்றுவதே என் இலட்சியம்

# றொசன்னா சைலின் குரூஸ்

## (195 புள்ளிகள்)



மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி றொசன்னா சைலின் குரூஸ் 195 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். அவருடைய நேர்காணலின் போது,

நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மாணவர்கள் அனைவரும் கற்றல் நடவடிக்கைகளில் பாதிப்படைந்து இருந்தனர்.

ஆனால் பாடசாலை ஆசிரியர், அதிபர், பெற்றோர் ஆகியோரின் முயற்சியினால் நான் சித்தியடைய சந்தர்ப்பம் கிட்டியது.

அவர்களுக்கு முதலில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். எனது எதிர்கால இட்சியம் வைத்தியராக வந்து எமது மக்களுக்கு சேவை செய்வதே என அவர் மேலும் தெரிவித்தார்.(நி-4-285)

## பிரித்தானிய கூலிப்படை தொடர்பான ஆவணங்களை வெளியிடுவதில் தடங்கல்

**(கொழும்பு) இலங்கையில் 1980 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்பட்ட பிரித்தானிய கூலிப் படையினர் தொடர்பான ஆவணங்களை வெளியிடுவதில் பிரித்தனிய வெளியுறவு அலுவலகம் தடங்கல்களை ஏற்படுத்தி வருவதாக த கார்டியன் தெரிவித்துள்ளது.**

1980 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் பிரித்தானிய கூலிப் படையான "கீனி மீனி சேர் விஸ்" என்ற அமைப்பு இலங்கையின் படையினருக்கு பயிற்சிகளை வழங்கி வந்தது.

இதற்கு பிரித்தானிய அரசாங்கத்தின் இராஜதந்திர ஆதரவு இருந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் இது தொடர்பான ஆவணங்களை பிரித்தானிய வெளியுறவு அலுவலகம் போர்க்குற்றம் தொடர்பாக பிரித்தானிய பொலிஸார் மேற்கொண்டு வரும் விசாரணைகளுக்காக வழங்குவதில் தயக்கம் காட்டி வருகிறது.

இதனையடுத்து புலனாய்வு செய்தியாளர் பில் மில்லர் இந்த ஆவணங்களை பிரித்தானிய வெளியுறவு அலுவலம் வெளியிட வேண்டும் என்று கோரி நாட்டின் தகவல் தொடர்பான தீர்ப்பாயத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாக த கார்டியன் தெரிவித்துள்ளது.

1985 ஆம் ஆண்டில் கீனி மீனி சேவையின் தகவல்களையே அவர் பிரித்தானிய தீர்ப்பாயத்தின் ஊடாக கோர விருக்கிறார்.

இந்த ஆவணங்கள் இலங் கையின் பாதுகாப்புப் படையினருக்குக் குறித்த பிரித்தானிய கூலிப்படை பயிற்சிகளை வழங்கியபோது அதற்கு பிரித்தானிய அரசாங்கம் ராஜதந்திர ஆதரவை வழங்கியமை தொடர்பானவை என்று த கார்டியன் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் போரில் பிரித்தானியாவின் தலையீடு தொடர்பான நூல் மற்றும் விவரணப் படத்தின் ஆசிரியரான பில் மில்லர், இந்த ஆவணங்களை ஏன் பிரித்தானிய அரசாங்கம் தமிழர்களிடம் இருந்து 2046 ஆம் ஆண்டு வரைக்கும் மறைக்கவேண்டும் என்று வினவியுள்ளார். பிரித்தானிய அரசாங் கத்தின் சட்டப்படி இராஜதந்திர ஆவணங்கள் 20 வருடங்க ளில் வெளியிடப்பட வேண்டும். 60 வருடங்களில் அல்ல என் றும் மில்லர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

## தடுப்பூசியை பெற்றுக்கொடுக்க அரசு தவறிவிட்டது

### சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)

கொவிட் - 19 தொற்றிலிருந்து மக்களைக் காப்பற்றக்கூடிய தடுப்பூசியை வழங்குவது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

திஸ்ஸமஹாராமவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மக்களுக்கு கொவிட் தொற்றுக்கெதிரான தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க அரசு தவறிவிட்டது.

கொவிட் - 19 இற்கான தடுப்பூசி மூலம் இந்த நாட்டின் **90%** மக்கள் தொற்றிலிருந்து தம்மை காத்துக்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# புலமைப்பரிசில் பரீட்சையில் வென்ற மாணவர்களுக்கு வாழ்த்து

(கொழும்பு)

**புலமைப்பரிசில் பெறுபேற்றை விரைவாக வெளியிட பரீட்சை திணைக்களம் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களை அரசாங்கம் வாழ்த்துகிறது எனக் கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு வெளியிடப் பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் பரீட்சை பாதுகாப்பான முறையில் நடத்தப்பட்டது.

இவ்வாறான நிலையிலும் பரீட்சைப் பெறுபேறு 33 நாட்களுக்குள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் உயர்தரப் பரீட்சையும் நடத்தப்பட்டது.

அதன் பெறுபேறுகளும் விரைவில் வெளியிடப்படும். பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் மாணவர்களை விரைவாக இணைத்துக் கொள்ள புதிய திட்டம் செயற்படுத்தப் படுகிறது.

2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த.சாதாரண தர பரீட்சை அடுத்த வருடம் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை நடத்த தீர்மானிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## தடை நீடிப்பு

(கொழும்பு)

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான தடையை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பது என நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் தடைகாரணமாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை சேமிக்க முடியும் என அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ-4)

## உயர் நீதிமன்றின் தீர்மானம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட அனைத்து வழக்கு விசாரணைகளுக்காகவும் புதிய திகதிகளை வழங்குவதற்கு கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் குழாமினால் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முற்பகல் வேளையில் உயர் நீதிமன்றினால் ஒத்திவைக்கப்பட்டிருந்த அனைத்து வழக்குகளையும் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவது தொடர்பில் ஆராயப்பட்ட போது இந்தத் தீமானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-4)


31ம் நாளில் நினைவு கூருகின்றோம்

அமரர் நாகேஸ்வரி சரசானந்தராசா



எமது திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி க.சிவரஞ்சினி அவர்களின் அன்புத்தாயார்

நாகேஸ்வரி சரசானந்தராசா

அவர்கள் கடந்த 18.10.2020 அன்று காலமானதையிட்டு இன்றைய 31 ஆம் நாளில் நினைவுகூருவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளரும்
உத்தியோகத்தர்களும் மாகாண விவசாயத் திணைக்களம், வடமாகாணம்.

(4556)


## குணமடைந்தோர் 11,806

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற் றில் இருந்து குணமடைந்தோ ரின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

அந்தவகையில் நேற்று மேலும் 311 பேர் குணமடைந் துள்ளதாக சுகாதார அமைச் சின் தொற்றுநோயியல் பிரிவு அறி வித்துள்ளது.

நாட்டில் இதுவரை குண மடை ந்தோரின் மொத்த எண் ணிக்கை 11 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-4)

## கோயிலுக்குள் உயிரிழந்த பூசகர்

(கொழும்பு)

ஜா-எல பிரதேசத்தில் உள்ள கோயில் ஒன்றின் பூசகர் கோயிலுக்குள் உயிரிழந்துள்ளர்.

பிரதேசவாசிகளிடம் இருந்து ஜா-எல பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸார் நேற்று முன்தினம் குறித்த பூசகரின் சடலத்தை மீட்டுள்ளனர். உயிரிழந்த பூசகரின் மரணத்திற்கான காரணத்தை அறிய பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் பிரேதப் பரிசோதனைகளை நடத்துமாறு ராகம திடீர் மரண விசாரணை அதிகாரி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஜ-4)


நீங்காத நினைவலைகள்



சின்னையா ஜோன்
மண்ணுலகில்: 08.09.1932
விண்ணுலகில்: 17.11.1995

ஜோன் பிறிஜெற்பற்றிமா
மண்ணுலகில்: 16.02.1960
விண்ணுலகில்: 09.03.1967

ஜோன் அமிர்தநாயகி
மண்ணுலகில்: 10.10.1941
விண்ணுலகில்: 13.10.2020

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம் நெஞ்சங்களில் நிலையாய் வாழும் எம் தெய்வங்களே!

(4855)

மடத்தடி அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.


## கட்டுநாயக்கவில் 2 ஆவது முனையம்

(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பல அடுக்குகளைக் கொண்ட இரண்டாவது முனையத்தை நிர்மாணிக்கும் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளன.

நாளை 18 ஆம் திகதி புதன்கிழமை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கட்டுமானப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அத்துடன் இந்த முனையத்தை நிர்மாணிக்க சுமார் 107 பில்லியன் ரூபாவுக்கு மேலான தொகை செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த அபிவிருத்தி திட்டத்திற்கு ஜப்பான் முதலீடு செய்துள்ளதாகவும் இதனை மூன்றாண்டுகளுக்குள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## கொழும்பு-புறக்கோட்டை விசேட கண்காணிப்பு

(கொழும்பு)

கொழும்பு - புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையம் மற்றும் பெஸ்டியன் மாவத்தையில் அமைந்துள்ள தனியார் பேருந்து நிலையம் என்பவற்றை சுகாதார நடைமுறைகளுடன் திறப்பதற்கு நேற்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளைக் கண்காணிப்பதற்கு நடவடிக்கைககளை மேற்கொண்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஜ-4)

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

### யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

அ.அஜினி - 195 ,சு.கஜானன்- 194 , ரா.தர்ஷாந்-194, ப.பிரீத்திகா-194, ம.பர்விஜன்-193 , ர.அஸ்வின்-193, நீ.தனார்த்தனா-192 , இ.அம்பிகா-192 , ச.சிவஜனன்-192, இ.உதர்ஷி-192, தி.கீர்த்திகா-191, ஜெ.நிதுஷனன்-191, அ.இலக்கியா-190 , சி.ஆரபி-190, ச.யனுஷ்கான் -190, சி.பபிஷா-190, பா.காவியா-190 , அ.மது வந்தி-189, செ.ஆகாஷ்-189,யூ.மே.ற.ஆன்சிரோனி-188 , நி.லதுஷ்-188, கு.கிருத்திகன்-188, அ.சஹானா-187,ச.அஷாந் -187, டு.லூட்சிகா-187, க.லகிஷியா-187, கொ.மெரின்கொலினா-186,ஜ.அரிஷ்ணவன்-186, அ.சிறோன்-186, ஜெ.அஞ்ஞனா-186, ஜெ.சஞ்ஜனா-185, ச.சபிஷா-185, பி.கானப்பிரியன்-185 , யூ.ர.திவ்யனா-185, ஜெ.அட்சரா-185, ந.திவக் ஷி-184, ந.தர்ஷீபன்-183, ரா.சாத்விகா-182 , ம.ஸ்ரீரசிக்கா-182, கு.பிருந்தகி-182, கி.கிவூனா-181, ஜெஅரோன் ஷா-181, அ.அனனி-180, சி.அபிநேகா-180, ம.நேத்ரா-180, நி.மரியநிஷாரா-180, து.ஷெரினா-180, மு.தானியா-180, ற.ஆருணியா-180, உ.வைஷாலினி-180, ம.அபனா-179, பி.கிருஷிகா-179, சு.சுஜின்-179, கே.சர்வேஷ்-179, உ.அபிநாத்-179, க.வர்ஷிகா-178, ப.சகானா-178, ஆ.துஷனந்-178, சி.துஷாகரி-178, ஜெ.ஆன் லிஷா-178, வி.நிருஷன்-178, க.விமலிகா-178, செ.செல்வஜன்-177, ம.கவின்-177, எ.எலோஜின் எல்விஸ்-177, அ.செ.ஏஞ்சலின் -177, யோ.அனோமிகா-176, சி.பிரஜீஷ்-176, கி.செ.சாரா கிறிஸ்ரிகா-176, நி.பவியா-176, பி.பிரீத்திகா-176, சி.லக்ஷகன்-176, பி.டெரிஷான்-176, ஜெ.தியோமின் நிதிஷ்-176, லி.தேஜஸ்வினி-176, க.பபிஷானி-175, கி.காத்யாயினி-175, ச.காவியா-175, அ.றினோஷன்-175, ர.டிலக்ஷிகா-175, வி.ருஷாந்-175, சி.சாருஜன்-174, த.அபினகா-174, கி.பவிதா-174, கு.அகீஷன்-174, ப.கரிஷ்றாம்-173, லி.தேஜஸ்விதன்-173 , தே.அட்சயன்-173 , றொ.அஸ்றின்றேகன்-173, வை.மகிஷியா-173, செ.சஸ்டிக்கா-173, சி.திஷான்-172, ர.நிதுர்ஷிகா-172, ஜெ.ஜெருசிகா-172, பி.அ.கி.அட்சயன்-172, ஜெ.சனமிகா-172, க.தருணிகா-172, ச.சுஜனிகா-172, சி.நித்தியசிறி-172, ஈ.உபநயா-172, கு.ஹரிஸ்-171, கி.சயீரா-171, ம.திவ்யன்-171, கு.நிதுஷன்-171, பி.ஜதுர்ஷா-171, சு.சுலக்ஷன்-170, ஜோ.ஜெனிங்ஸ்ரன்-170, அ.சாகித் தியா-170, ர.அபிநயா-169, ஜீ.கிருசிகேசன்-169, ர.டஸ்மிகா-169, வ.அக்ஷயமரகதன்-168, ச.நிரோன்-168, யூ.ர.திபேரிநாத் -168, பி.அக்ஷயன்-168, ச.கஜவின்-168, ஞா.கேசயன்-168, சி.சிவடனுசிகன்-167, க.சதுர்த்திகன் -167, மோ.மிதுகன் -167, சி.சீரோன்-167, உ.அஸ்மிகா-167, சு.சானுஜா-166, மு.அக்ஷயன்-166, ம.கருணிகா-166, ஜெ.அஸ்வின்-166, சு.தருணியா-165, நி.அரிஸ்ரோ-165, ஜெ.ஹர்ஷிகா-165, க.சானுஜா-164, க.பார்கவி-164, பா.பிருத்திவ்-164, ஸ.அத்விகன்-163, ப.பிரஷாணந்-163, ச.லஷானி-163, து.கிதுஷனா-163, அ.சவீக்ஸ்னா-163, லி.ஆதிரவர்மன்-162, தி.சாருஜீன்-162, கோ.ஜோசுவா-162, ப.கவின் மிஹிரன் -162, த.மேரிஆதித்தியா-162, வி.அக்ஷயா-162, பா.தணிகைவாணன்-162, சே.அனிஷா-162, ஜெ.றேனுசன்-162, க.மிதுஷன்-162, அ.டினுஜா-162, செ.சாத்விகா-162, ரா.கீதநிலவன் -161, சி.சுரவின்-161, சி.சிவடனுஷன்-161, வி.ஜகீஷன்-161,வி.நிதுஷிகா-161, சி.சுவேதா-161, தீ.பக்ஸ்சலன்-160, கோ.தீபனா-160, தி.நிமிலி-160, சு.மிஷேல் ஆயொஜனா-160.

### யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை

சு.யனுஸ்கா-198, கி.கோபிசா-193, உ.வாசனா-190, பி.யர்சனன்-188, ச.அதிஸ்ரா-185, ர.ஸ்ரீராம்-183, ச.மகிழாசினி-183, கே.யதுர்சிகா-181, வி.டிசானி-181, த.விஸ்ணவி-181, க.துசானன்-180, தி.தயுஸ்ரன்-179, வி.தஸ்மிகா-179, தா.அபிராமி-179, கு.யனுசா-178, ர.கசன்றா-178, க.குருஷோத்மன்-177, செ.மோகிஷா-176, நி.கபிசன்-175, எ.மதுரா-175, றொ.பிறின்சன்- 174, ர.திருஸ்ரிகா-174, சு.கலைவாணன்-173, பி.தர்சன்-173, ப.ஜதுஷிகா-171, ஜெ.யோகிதா-168, மோ.அபி சன்-167, த.கோகுலயா-167, கு.லக்சாயனன் -167, சி.சதுமி-164, சு.தரணிகா-163, தீ.மதிவர்ணன்-162, சி.சிவாட்சரன் -162, சி.சிபிஜா-161, க.தஸ்மிகா-160, ம.சஸ்மிதா- 160.

### யா/உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலை

ப.பானுசா-178, ஸ்ரீ.நிந்திகா-177, ர.தணிகா-174, சு.துஷியா-168, ஆ.சாகித்தியா-168, சு.அதினயா-166, செ.அனுஷ்கா-163.

### கிளிநொச்சி முருகானந்தா ஆரம்ப வித்தியாலயம்

எஸ்.சாதுரியன்- 182, பி.சாகித்தியன்- 182, ஆர்.இசாக்பார்சன்- 180, ஏ.சறோன் -178, எஸ்.பவிசா-178, வீ.பவித்திரன்- 176, என்.ஜஸ்ணவி-175, ஏ.எழி லன்- 175, பி.சயந்தினி- 175, எஸ்.கானுஜன்- 174, எ.கிருஸ்னவி-174, கே.லோஜிதன்- 172, எஸ்.அட்ச யன்-169, வி.ஜதுர்ஜன் -168, எஸ்.ராதிகா-168, ஏ.கபிசன்-168, எஸ்.டனுசியா-166, ஏ.சஞ்சை-163.

### யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்

ஏ.மதுசா-178, கே.நிதுசிகா-166.

### வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்

ஆர்.அஸ்வின் -174, வி.கனுஷா-173 , ஆர்,அபிசாந்- 168, மா,விகர்ணன்-160.

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்

த.ஜிவிதா-158, ம.அருணன்-157, க.கனிஷ்ரன்-143, ம.அனுஷ்கா-135, கி.சியானுஜன் -129, ச.தட்சயன்- 123 , ஈ.சுகன்யா-122, க.கஜிதரன்- 117, க.மதுராஜ்- 106.

### சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

பா.கவிஷன்-189, ஜெ.நிர்மிகா-184, கு.செந்தூரி -178, கு.மிதுஷன்-171, க.சயான-170,செ. துவாரகா-169, வ.ஜெஸ்விந்-164, ர.கபிநயன்-162, த.பத்மபிரியன்-161, ஜெ.மகேசன்-160.

### கிளி/கரியாலை நாகபடுவான் இல.02 அ.த.க.பாடசாலை

செ.மதுசாளினி- 165

### யா/செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை

சி.கிருசாணி-174

### யா/ கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை

சு.கீர்த்தி -168

# நகரசபை பாதீட்டில் வீதிப்புனரமைப்பு உள்ளடக்கம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிப்பின் போது சபை எல்லைக்குட்பட்ட தேவைப்பாடுடைய 17வீதிகள் புனரமைக்க 15 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் சப்பச்சிமாவடி வீதி, சித்தி விநாயகர் கலைமன்ற வீதி, கடற்கரை வீதி இடது பக்க இணைப்பு ஒழுங்கை, கடற்கரை வீதி 4 ஆம் 5 ஆம் ஒழுங்கைகள், விஜயா வீதி வலது பக்க முதலாம் ஒழுங்கை, மாவடிப்பிள்ளையார் வீதி இரண்டாம் குறுக்கு ஒழுங்கை, கல்வயல் குறுக்கு வீதி முதலாம் ஒழுங்கை, பொன்னர் வீதி முதலாம், இரண்டாம் பகுதி வீதி, வீரபத்திரர் கோவில் வீதி மூன்றாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி வலப்பக்க முதலாம் ஒழுங்கை, பெரிய அரசடி வீதி வலது பக்க இரண்டாம் ஒழுங்கை, கண்டுவில் 2 ஆம் ஒழுங்கை 3 ஆம் குறுக்கு வீதி, ஹென்ஸ்மன் வீதி இடது பக்க 2 ஆம் ஒழுங்கை, ஆராட்சியாளர் வீதி, மருதடி வலது பக்க முதலாம் ஒழுங்கை மற்றும் பெரியமாவடி கந்தசாமிகோவில் வீதி 2 ஆம் ஒழுங்கை ஆகிய வீதிகள் புனரமைப்பிற்காக சபையில் முன்மொழியப்பட்டு பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகர சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான பாதீடு 118 மில்லியன் ரூபாய் உத்தேச வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டு தற்போது மக்கள் பார்வைக்காக நகரசபை மற்றும் நகர சபையின் நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பாதீடு எதிர்வரும் புதன்கிழமை சபையின் அங்கீகாரத்திற்கு விடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)



**"விதையனைத்தும் விருட்சமே" இளைஞரணியின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு "பசுமையான யாழ்" எனும் தொனிப்பொருளில் மரம் நடும் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இதில் 2 ஆம் கட்டம் நேற்று முன்தினம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு முன்பாக இடம் பெற்றது.**

# இறந்தவர்களை நினைவுகூருவதை தடுக்க எந்த நாட்டிலும் சட்டம் இல்லை

## கஜேந்திரன் தெரிவிப்பு




**போ (பனிக்கன்குளம்) ரில் இறந்தவர்களை நினைவுகூருவதற்கான உரித்து உறவுகளுக்கு இருக்கின்றது. அதனை தடை செய்வதற்கு இந்த நாட்டு சட்டத்திலும் இடம் இல்லை. சர்வதேச சட்டத்திலும் இடம் இல்லை எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல வளாகம் சிரமதானப்பணிமூலம் துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அங்கு வருகைதந்து சிரமதான பணிகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்திற்கு வருகின்ற பொழுது இதற்கு அண்மையில் உள்ள சந்திகள்.வீதிகள் எங்கும் படையினர், பொலிஸார் குவிக்கப்பட்டு வீதியால் சென்றவர்கள் அச்சுறுத்தப்பட்டனர்.

மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டதன் காரணமாக மக்கள் சிரமதான பணிகளில் கலந்து கொள்ளாத நிலை கொரோனாவினை காரணம் காட்டி துப்புரவு செய்தவர்களை கைது செய்யும் நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள். பத்துப் பேரைக் கொண்டுதான் சிரமதான பணிகளில் ஈடுபட்டோம்.

போரில் இறந்தவர்களை நினைவுகூருவதற்கான உரித்து உறவுகளுக்கு இருக்கின்றது. அதனைத் தடைசெய்வதற்கு சட்டத்தில் இடம் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வறுமையை இல்லாதொழிக்கவே இத்திட்டம் உருவாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்தில்முதற்கட்டமாக இணைக்கப்பட்டவர்கள் தங்கள் குடும்பத்தின் வறுமை நிலையை இல்லாமலாக்க, முறையான பயிற்சிகளை பெற்று சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக மிளிர வேண்டும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு என்ற தொனிப்பொருளில் நாட்டின் வறுமைக்குட்பட்டோரிற்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதே தேசிய இளைஞர் படையணிக்கான தலைமைத்துவ பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு கொக்குவிலில் அமைந்துள்ள தொழில்நுட்ப கல்லூரியில் நேற்றுக் காலை உத்தியோக பூர்வமாக ஆரம்பமாகியது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் 306 பேர் முதற்கட்டமாக தேசிய இளைஞர் செயலணியின் கீழ் இணைக்கப்பட்டுள்ளார்கள். இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 94 பேர் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

பல்நோக்கு செயலணியின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தலைமைத்துவ பயிற்சி 14 நாட்கள் நடைபெறவுள்ளன.

அரசாங்கம் மிகவும் வறியவர்களிற்காக இவ் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பினை வழங்குகிறது. வறுமை நிலையில் உள்ள இளைஞர்,யுவதிகள் தங்கள் குடும்ப நிலையை கட்டியெழுப்புவதற்காக இவ் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.

வேலைவாய்ப்பு இன்மையினால் பல்வேறு சமூகப் பிறழ்வுகள் சமூகத்தில் ஏற்படுகிறது. ஆதலால் அரசாங்கம் இத் தொழில் வாய்ப்பு திட்டத்தினை கொண்டு வந்துள்ளது. எனவே நீங்கள் இத் தொழில் வாய்ப்பு மூலம் பயிற்சி பெற்ற ஒரு தொழிலாளர்களாக மாறுதல் வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் படித்தவர்கள்.படிக்காதவர்கள் என்ற பேதமில்லாது ஏதோவொரு திறமையுள்ளது. ஆதலால் இப் பயிற்சிநெறி திட்டமிட்ட வகையில் முறையாக வழங்கப்படுகிறது.

நீங்கள் தொழில்வாண்மையுள்ள தொழிலாளர்களாக மிளிர்ந்து வறுமையை உங்கள் குடும்பத்திலிருந்து இல்லாமல் செய்யவேண்டும் என மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (5-4-33)


**யாழ். நல்லூர் கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டி உற்சவம் நேற்று முன்தினம் மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. தற்போதைய கொவிட்-19 சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு சுகாதார நடைமுறைகளுக்கமைய கந்த சஷ்டி முதலாம் நாள் உற்சவத்தின் போது அழகிய இடப வாகனத்தில் முருகப் பெருமான் எழுந்தருளி, உள் வீதியுலா வந்தார். (படங்கள்:- சிவசாந்தன்)**









**கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிறந்தநாள் அன்று 20 சிறுவர்களுக்கு இலங்கை வங்கி கொக்குவில் கிளையில் சிறுவர் சேமிப்பு கணக்கு ரன்கெகுளு ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

# உடைப்பெடுத்த ஊற்றுக்குளம் சீரமைக்கும் பணிகள் முன்னெடுப்பு



(நெளுக்குளம்)

அண்மையில் உடைப்பெடுத்த வவுனியா நெடுங்கேணி ஊற்றுக்குளத்தின் சீரமைப்பு பணிகளை மாவட்ட அரச அதிபர் மற்றும் அதிகாரிகள் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டனர்.

வவுனியா மாவட்டத்தில் பல நாட்களாக பெய்த கனமழையால் வவுனியா வடக்கின் ஊற்றுக்குளம் உடைப்பெடுத்தது.

இந்நிலையில் பழுதடைந்த குளக்கட்டினை கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் வன்னி பாதுகாப்புப் படைத் தலைமையக இராணுவத்தின் உதவியுடன் தற்காலிகமாக சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குளத்தின் புனரமைப்புப் பணிகளை வவுனியா மாவட்ட செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, இராணுவ அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர். (5-4-299)

# மன்னார் மாவட்ட அரச அதிபராக நந்தினி பதவியேற்றார்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, மாவட்டத்தில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதோடு, இன, மத நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதே எனது நோக்கமாக உள்ளது என மன்னார் மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக நேற்று திங்கட்கிழமை பதவியேற்ற திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட புதிய அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் நேற்று தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சர்வமத தலைவர்களின் ஆசியுடன் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது சொந்த மாவட்டமான மன்னாரின் சகல துறை சார் அனுபவங்களையும் ஏற்கனவே கொண்டுள்ளேன் என்ற அடிப்படையில், இந்த மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, மாவட்டத்தில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதோடு, இன, மத நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதே எனது நோக்கமாகும்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மன்னார் கமநல சேவை திணைக்கள உதவி ஆணையாளராகவும் மன்னார் பிரதேச செயலாளராகவும் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகவும் வட மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளராகவும் கடமையாற்றி உள்ளார். (5-4-285)

# பழைமையான நாணயங்களை தேடிவந்த நால்வர் கைது





(மன்னார்)

மன்னார் வங்காலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய நபர்களை விசாரணை செய்தபோது முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களைத் தெரிவித்த நான்கு நபர்கள் வங்காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

கொழும்பு குளியாப்பிட்டியைச் சேர்ந்த நான்கு நபர்களே வங்காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் மன்னார் பகுதியில் பழங்காலத்து VOC என பொறிக்கப்பட்ட நாணயம் மற்றும் பீங்கான்களைத் தேடி வந்ததாகவும் அவர்களின் தொலைபேசிகளிலும் பழங்காலத்து நாணயங்களின் புகைப்படங்களும் காணப்பட்ட நிலையில் அவர்களைச் சந்தேகத்தின் பெயரில் விசாரணை மேற்கொண்டனர். இதன்போது ஒவ்வொருவரும் வெவ்வேறு பதில்களைக் கூறியதுடன் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தனர். அதனையடுத்தே கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் முன்னிலையாகி குறித்த நபர்கள் சார்பான வாதத்தையும் முன்வைத்த நிலையில் சம்பந்தப்பட்ட நான்கு நபர்களையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது. (5-4-285)

# பாதீட்டு முன்மொழிவுகளும் பங்குச்சந்தை முதலீடுகளும்

## இணையவழிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டமானது எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ்.கிளையினால் பாதீட்டு முன்மொழிவுகள் மற்றும் பங்குச்சந்தை சமகால போக்குகள் தொடர்பான தமிழ்மொழிமூலமான இணையவழி (ZOOM) கருத்தரங்கு எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மாலை 6.30 தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெறவுள்ளது.

இவ் இணையவழிக் கருத்தரங்கில் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் தொடர்பான பகுப்பாய்வும் அதனூடாக பங்குச்சந்தை எதிர்வுகூறல்கள் தொடர்பான விளக்கங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிகத் தகவல்களுக்கு கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் யாழ்.கிளை முகாமையாளர் ச.சபானந்தனை 077 710 5205 என்ற இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# அனர்த்தம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல்



(முறிகண்டி)

அனர்த்தங்களை தடுப்பது தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் நேற்று கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், படையினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


கண்டாவளை பிரதேசத்தில் அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், அவற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பான அமைவிடங்களை அடையாளம் காணல் உள்ளிட்ட பல விடயங்களும் ஆராயப்பட்டன.

இரணைமடுக்குளம் மற்றும் கல்மடு குளம் ஆகியன வான் மட்டத்தை அடைந்து மேலதிக நீர் வெளியேறும் சந்தர்ப்பத்தில் அதிகளவு பாதிக்கப்படக்கூடிய பிரதேசமாக கண்டாவளை பிரதேசம் காணப்படுகின்றது.

இந்நிலையில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது தொடர்பிலும் அனர்த்தத்திலிருந்து மக்களை பாதுகாப்பது தொடர்பிலும் விசேடமாக ஆராயப்பட்டது.

தற்போது மாவட்டத்தில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகி வரும் நிலையில் குளங்களின் நீர்மட்டமும் படிப்படியாக அதிகரித்து வருகிறது.

இவ்வாறான நிலையில் பிரதேசம் மற்றும் மாவட்டத்தினை அனர்த்தத்திலிருந்து பாதுகாப்பது தொடர்பிலும், மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்படாமலும் வாழ்வாதாரங்களில் தாக்கம் ஏற்படாத வகையிலும் முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்கான முன்னாயத்தங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (5-4-100-315)



**மன்னார் முசலி கிராமத்தில் வீடற்ற ஒரு குடும்பத்திற்கு L.U.D.F. பவுண்டேசன் அமைப்பினால் அமைக்கப்பட்ட வீட்டை அதன் தலைவர் வைத்தியர் ஹரிஸ்தீன் கடந்த வெள்ளிக்கிழமை பயனாளிகளிடம் கையளித்தார்.**

**(படம்:- ஜோசப் நயன்)**

# இராசிபலன்

17.11.2020
கார்த்திகை 02 செவ்வாய்க்கிழமை,
துதியை காலை 7.27 மணிவரை
திருதியை பின்னிரவு 5.43 மணிவரை
கேட்டை பிற்பகல் 4.33 மணிரை
சுபநேரம் 10.38-12.08 மணிவரை
இராகுகாலம் 3.08-4.38 மணிவரை
சந்திராஷ்டமம் -பரணி, கார்த்திகை
சித்தாமிர்தம்

வளவன்


மேஷம்

வார்த்தைகளில் நிதானம் தேவை, புதிய முயற்சிகளை தாமதித்து செய்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், சஞ்சலங்கள் கூடும் நாள்.


ரிஷபம்

செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


மிதுனம்

பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, கடன் தொல்லைகள் தீர மாற்று வழியைக் கையாள்வீர்கள்.


கடகம்

தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


சிம்மம்

தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.


கன்னி

குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், சுயமுயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


துலாம்

உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்து சேரலாம், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.


விருச்சிகம்

மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வழிபாடு குதூகலம் தரும்.


தனுசு

எடுத்த காரியத்தை முடிக்க சற்று அலைய வேண்டி வரலாம், தேவையற்ற மனஸ்தாபங்களைத் தவிர்ப்பது நல்லது, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


மகரம்

மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பங்கள் இடம்பெறலாம், வருமாணம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்

பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நலன்கருதி தீட்டிய திட்டங்கள் எளிதில் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள்.


மீனம்

தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், மனதில் இருந்த பாரம் குறையும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ரோக பயமுண்டு.

அன்புத்தீயால் அனைத்துத் தீயையும் அணைக்க முடியும்.

# இளைஞர்களுக்கு குறைந்த வட்டியுடன் வணிகக் கடன்

(கொழும்பு)

**சிறு தொழில் நிறுவனங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ள இளைஞர்களுக்கு அரச வங்கிகள் மூலம் குறைந்த வட்டியுடன் வணிகக் கடன்களை பெற்றுக்கொடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து தான் இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடியதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



ஊடகம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டபோது, இளைஞர்கள் வணிகக் கடன்களுக்கு விண்ணப்பிக்கும் போது தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எனக்குத் தெரிவித்தனர்.

இந்நிலையில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மூலம், இளைஞர்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் இன்றி நிதி உதவியைப் பெற உதவும் ஒரு கடன் திட்டத்தை வடிவமைக்க இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடல்களைத் தொடங்கியுள்ளேன்.

தற்போது, தனியார் மற்றும் அரச வங்கிகளில் இந்த கடன்களுக்கான வட்டி மிகவும் அதிகமாக உள்ளது.

இதனால் சிறு நிறுவன உரிமையாளர்களுக்கு செலுத்த முடியாமல் போகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

2021 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி கடன் திட்டத்தை நிறுவ அமைச்சு போதுமான நிதியை ஒதுக்குகிறது.

இதனால் இளைஞர்களுக்கு இலகுவாக வணிகக் கடன்களைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிட்டும் என் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வில்பத்து விவகாரம்; மீள் நடுகைக்கு உத்தரவு

(கொழும்பு)

வில்பத்து கல்லாறு பகுதியில் காடழிக்கப்பட்டமை சட்டத்துக்கு விரோதமானது என்றும் அழித்த பகுதியில் சொந்தப் பணத்தில் மீள் நடுகை நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையம் தாக்கல் செய்த மனு மீதான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் மீள் நடுகை மேற்கொள்ளப்படுவதுடன், வழக்குத் தாக்கல் செய்தவர்கள் செலவிட்ட செலவீனத்தையும் மீளச் செலுத்துமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவது எனத் தெரிவித்து கல்லாறு பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் காடு அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஜனாதிபதியுடன் கலந்துரையாட தீர்மானம்

(கொழும்பு)

வாகன இறக்குமதி தடையின் விளைவாக அந்நிய செலாவணி இழப்பு குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கலந்துரையாட வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த மாத இறுதிக்குள் ஜனாதிபதியுடன் சந்தித்து கலந்துரையாடுவோம் என வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் சிரிஷாந்த கமகே தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பி.சி.ஆர். இயந்திரம் பழுதடையவில்லை

## உதிரிப்பாகங்கள் பற்றாக்குறை என்கிறது சீனத்தூதரகம்

(கொழும்பு)

முல்லேரியா வைத்தியசாலை (கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை) பி.சி.ஆர்.இயந்திரத்தில் தொழில்நுட்பக் கோளாறு எதுவும் ஏற்படவில்லையென சீனத் தூதரகம் தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளது.

அண்மைக் காலங்களாக வேகமாக பரிசோதிக்க பயன்படுத்தப்பட்ட பரிசோதனைக்கான உதிரிப்பாகங்கள் பற்றாக் குறையால் குறித்த இயந்திரத்தின் செயற்பாடு பாதிக்கப்பட்டுள்ளதாக தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது புதிய பரிசோதனை உதிரிப்பாகங்களின் தேவை ஏற்பட்டுள்ளது. அவை 3-4 நாட்களில் வரும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கிழக்கு முல்லேரியா வைத்தியசாலையில் அண்மையில் திருத்தப்பட்ட பி.சி.ஆர். இயந்திரம் மீண்டும் பழுதடைந்து விட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இந்நிலையிலேயே சீனத் தூதரகம் மேற்கண்டவாறு டுவிட்டரில் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# பிரதேசசபை பூட்டு

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஹபராதுவ பிரதேச சபையை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

"குறித்த பிரதேச சபையில் கடமையாற்றும் பெண்ணொருவரின் கணவர், கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதையடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், அப்பெண் கடமையாற்றும் பிரிவில் கடமையாற்றும் 10 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# உலக உணவுப் பாதுகாப்பின் நிலை

# அடுத்த ஆண்டு மிகவும் மோசமாகும்

## உலக உணவு அமைப்பு

(ஜெனிவா)

**கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக, உலக உணவுப் பாதுகாப்பின் நிலை இந்த ஆண்டைவிட எதிர்வரும் 2021ஆம் ஆண்டு மிகவும் மோசமானதாக இருக்கும் என்று ஐ.நா. உணவு நிவாரணப் பிரிவான உலக உணவு அமைப்பு எச்சரித்துள்ளது.**



நடப்பாண்டின் அமைதிக்கான நோபல் பரிசை வென்றுள்ள அந்த அமைப்பின் தலைவர் டேவிட் பியஸ்லி கூறுகையில், "கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவல் காரணமாக, உலகின் பல்வேறு பகுதிகளில் மிகக் கடுமையான உணவுப்பஞ்சம் ஏற்படும் என்று நான் ஏற்கனவே எச்சரித்திருந்தேன்.

அந்த எச்சரிக்கையை ஏற்று, உலகத் தலைவர்கள் பல்வேறு உதவிகளை அளித்தனர். நிதியுதவி, ஊக்கத் திட்டங்கள், கடன் வசூல் நிறுத்தி வைப்பு போன்ற சலுகைகளை அவர்கள் அளித்தனர்.

அதன் பலனாக, இந்த ஆண்டு எதிர்நோக்கியிருந்த மிகக் கடுமையான உணவுப் பஞ்சம் தவிர்க்கப்பட்டது. ஆனால், தற்போது மீண்டும் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவல் தீவிரமடைந்து வருகிறது.

பல நாடுகள் மீண்டும் பொது முடக்கங்களை அறிவித்து வருகின்றன. நாடுகளின் பொருளாதாரத்தை கொரோனா வைரஸ் நெருக்கடி தொடர்ந்து பாழ்படுத்தி வருகிறது.


இந்தச் சூழலில், 2020ஆம் ஆண்டு எங்களுக்குக் கிடைத்த அதே நிதியுதவி அடுத்த ஆண்டு கிடைக்காமல் போகும். இதன் காரணமாக, இந்த ஆண்டைவிட அடுத்த ஆண்டு உணவுப் பஞ்சம் மிக மோசமானதாக இருக்கும்.

உலக நாடுகளின் தலைவர்கள் உரிய நிதியுதவியை வழங்காவிட்டால், இந்தச் சூழலைத் தவிர்க்க முடியாது. இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உணவுப் பஞ்சத்தைத் தணிக்கும் எங்களது முயற்சிகளுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் நெருக்கடியால் உலகம் எதிர்நோக்கியுள்ள உணவுப்பஞ்சம் குறித்து உலகத்தலைவர்களை எச்சரிக்க, இந்த நோபல் பரிசு எங்களுக்கு பக்கபலமாக இருக்கிறது" என தெரிவித்தார். (நி)

# 2,500 ஆண்டுகள் பழைமைவாய்ந்த சவப்பெட்டிகள் கண்டுபிடிப்பு

(கெய்ரோ)



கெய்ரோவுக்கு தெற்கே அமைந்துள்ள சக்காரா பகுதியில் குறைந்தது 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய சவப்பெட்டிகளையும் பெட்டிகளின் உள்ளே சில மம்மிகளையும் சிலைகளையும் கண்டுபிடித்துள்ளதாக எகிப்திய தொல்பொருள் அதிகாரிகள் சனிக்கிழமை தெரிவித்துள்ளனர்.

மெம்பிசை தலைநகராகக் கொண்ட பண்டைய எகிப்திய பார்வோன்களின் கல்லறைகள் கொண்ட தொல்லியல் நகரமான சக்காராவில் அண்மையில் கண்டறியப்பட்ட கண்டுபிடிப்புகளில் இது பிரதானமாக கருதப்படுகிறது.

எகிப்தில் இறுதியாக ஆட்சி செய்த 26 ஆவது வம்சாவளி மன்னர்களின் சடலங்களாக இந்த மம்மிகள் இருக்கலாம் என ஊகித்துள்ள ஆராய்ச்சியாளர்கள் இந்த சவப்பெட்டிகள் முத்திரையிடப்பட்டு, நேர்த்தியாக, வர்ணம் பூசப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சவப்பெட்டிகளும் அதனுடன் தொடர்புடைய மம்மிகளும் கலைப் பொருட்களும் எகிப்தின் பிரமாண்ட அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்படும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# பிடனின் வெற்றியை ஒப்புக்கொண்ட ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜோ பிடன் வெற்றி பெற்றுள்ளதாக ஜனாதிபதி ட்ரம்ப் முதல்முறையாக ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால், அந்த வெற்றி தேர்தல் மோசடியினால் பெறப்பட்டது என குற்றம் சுமத்தியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நிறைவடைந்து, தேர்தலில் ஜோ பிடன் அதிக கல்லூரி வாக்குகள் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதும் ட்ரம்ப் அதனை தேர்தல் மோசடி என குற்றம் சுமத்தியுடன் நீதிமன்றத்தையும் அணுகியிருந்தார்.

இந்நிலையில், அமெரிக்காவில் ஆர்ப்பாட்டங்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இன்றும் ட்ரம்புக்கு ஆதரவாக அணிதிரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் தேர்தலில் மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் தமக்கு மீண்டும் ட்ரம்பின் ஆட்சி வேண்டும் எனவும் பதாகைகளை ஏந்தியபடி



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பதவியேற்ற ஆறு நாட்களில் பதவி விலகிய ஜனாதிபதி


(கொழும்பு)



பதவியேற்ற ஆறு நாட்களுக்குப் பிறகு பதவி விலகுவதாக பெரு நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட மானுவல் மெரினோ தெரிவித்துள்ளார்.

மானுவல் மெரினோவை பதவி நீக்கக்கோரி தொடர் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வன்முறைகள் பெருவில் அரங்கேறி வருகின்ற நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பினை ஞாயிற்றுக்கிழமை தொலைக்காட்சி உரையொன்றின்போது அறிவித்துள்ளார். பெருவின் முன்னாள் ஜனாதிபதி மார்ட்டின் விஸ்கரா மீது கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளை தவறாக நிர்வகித்தமை, அரசாங்க ஒப்பந்தங்களை பெற்ற நிறுவனங்களிடமிருந்து இலஞ்சம் வாங்கியமை போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டமையினால் அவர் நவம்பர் 10 ஆம் திகதி பதவியிலிருந்து விலகினார். (நி)

# டுபாயில் நடந்த திருமண வரவேற்பு காரில் இருந்தபடியே வாழ்த்திய உறவினர்கள்



(டுபாய்)

டுபாயில் சமூக இடைவெளியுடன் இந்திய தம்பதிக்கு திருமண வரவேற்பு நடந்தது. இதில் காரில் இருந்தபடியே உறவினர்கள் மணமக்களை வாழ்த்தினர்.

திருமண வரவேற்பு நாளன்று சமூக இடைவெளி மற்றும் சுகாதார பாதுகாப்பு காரணங்களுக்காக வித்தியாசமாக வீட்டு வாசலின் முன்னால் அமைக்கப்பட்டு இருந்த அலங்கார வளைவு முன் இருவரும் நின்றனர். மாலை 4 மணி முதல் 6 மணி வரை நடைபெற்ற இந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு நண்பர்கள், உறவினர்கள் என அனைவரும் காரில் வருகை புரிந்தனர்.

இந்த நிகழ்ச்சிக்கு காரில் வந்தவர்கள் வாகனத்தை விட்டு வெளியே வராமல் உள்ளே இருந்தபடியே வாசலின் முன்னால் நின்று கொண்டிருந்த மணமக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்து புகைப்படமும் எடுத்து சென்றனர். காரில் இருந்து வாழ்த்து சொன்னவர்களையும் புகைப்படம் எடுத்தனர்.

ஒவ்வொரு காருக்கும் 2 நிமிட நேரம் வாழ்த்து தெரிவிக்க வழங்கப்பட்டு இருந்தது. கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை கடைப்பிடித்து வித்தியாசமாக சமூக இடைவெளியுடன் நடைபெற்ற இந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது. (நி)

# தீபாவளிப் பண்டிகையின் போது சீனப் பொருட்கள் புறக்கணிப்பு

(டில்லி)

இந்தியாவில் இந்த வருட தீபாவளி பண்டிகையின்போது மக்கள் சீனாவின் பொருட்களை புறக்கணித்தமையினால் அந்த நாட்டிற்கு 40 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அனைத்திந்திய வர்த்தகர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அனைத்திந்திய வர்த்தகர்கள் கூட்டமைப்பு இந்தியாவின் முக்கிய நகரங்களான டில்லி, மும்பை, சென்னை, பெங்களூர், கொல்கத்தா, நொய்டா, கொச்சின் உள்ளிட்ட 20 முக்கிய நகரங்களை விநியோக நகரங்களாக தெரிவுசெய்து மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

சீனப் பொருட்களை மக்களும், வர்த்தகர்களும் புறக்கணித்ததால் அதன் விற்பனை அடியோடு முடங்கியது. இதனால் சீனாவுக்கு இந்தப் பண்டிகை காலத்தில் மட்டும் 40 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை வர்த்தகர்களும், பொதுமக்களும் சீன பொருட்களை புறக்கணிக்க வேண்டும் என்று சி.ஏ.ஐ.டி ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பவித்திராவிற்கு எதிரான பிரேரணையை பெரும்பான்மை பலத்துடன் தோற்கடிப்போம்

## சவால் விடுகிறார் ஜகத் குமார



(கொழும்பு)

முடிந்தால் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிரணி கொண்டுவரட்டும். மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ஆளுங்கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்ட முதலாவது மற்றும் இரண்டாவது அலைகளை ஜனாதிபதி, பிரதமர், சுகாதாரப் பிரிவினர் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் இணைந்து உரிய வகையில் கட்டுப்படுத்தினர். சுகாதார அமைச்சரும் தீவிரமாகச் செயற்பட்டார். தற்போதுகூட கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுக்குள் தான் வைத்துள்ளோம்.

கொரோனாவை வைத்து சுகாதார அமைச்சரோ, அரசோ அரசியல் செய்யவில்லை. மக்களைப் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலேயே ஆராயப்பட்டு வருகின்றது.

நாம் ஆன்மீகத்தையும் நம்புகின்றோம். அந்தவகையிலேயே சுகாதார கங்கையில் சுகாதார அமைச்சர் மண்குடத்தைப் போட்டார். அது மதம் மீதுள்ள நம்பிக்கையாகும். ஆனால், அதனைக்கூட எதிரணியினர் கொச்சைப்படுத்துகின்றனர். சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் எனக் கூறுகின்றனர்.

முடிந்தால் நம்பிக்கையில்லாப்பிரேரணையைக் கொண்டு வருமாறு நான் சவால் விடுக்கின்றேன். அவ்வாறு பிரேரணை வந்தால் அதனை எதிர்கொண்டு தோற்கடிப்பதற்கு அரசு தயார். மக்களும் உரிய பதிலடியைக் கொடுப்பார்கள். என அவர் தெரிவித்தார். (நி-4)

# ஒரு வருடத்தின் பின் வெளியான வர்த்தமானி

(கொழும்பு)

சிங்கராஜ வனத்தை 36 ஆயிரத்து 474 ஹெக்டேயராக அதிகரிப்பது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் ஒருவருடத்திற்கு பின்னர் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி என திகதி குறிப்பிடப்பட்டு அந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைய காலமாக சிங்கராஜ வனத்திற்கு அருகில் நடக்கும் சட்டவிரோத நிர்மாணிப்புகள் காரணமாக சுற்றுச் சூழல் அமைப்புகள் உட்பட பல தரப்பினர் இந்த வர்த்தமானி அறிவித்தல் இதுவரை வெளியிடப்பட்டமை குறித்து கடும் எதிர்ப்புகளை வெளியிட்டிருந்தனர். (நி-4)

# கட்சி தாவியவர்களுக்கு ஆளும் கட்சி ஆசனங்கள்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான டயானா கமகே மற்றும் அரவிந்தகுமார் ஆகிய இருவருக்கும் பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சியில் ஆசனங்களை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஜ-4)

# ஒன்பது பேரை கொலை செய்யப் போகிறேன் துப்பாக்கியுடன் தலைமறைவான பொலிஸ்

(கொழும்பு)

உறவினர் வீடுகளுக்கு சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் தாம் 9 பேரை கொலை செய்யப்போவதாக தெரிவித்து துப்பாக்கியுடன் தலைமறைவாகியுள்ளார்.

இரத்தினபுரி குருவிட்ட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் குறித்த கான்ஸ்டபிள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இரத்தினபுரி - சிறிபாகம பகுதியில் கடமையில் இருந்து போது துப்பாக்கியுடன் தலைமறைவாகினார்.

அந்த துப்பாக்கியுடன் குருநாகல் பகுதியிலுள்ள அவரது உறவினர் வீடுகளுக்கு சென்ற அவர் தாம் 9 பேரை கொலை செய்யவுள்ளதாக கூறியுள்ளார்.

அந்த 9 பேரில் குருவிட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பெயரையும் அவர் குறிப்பிட்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த நபர் வாடகைக்கு அமர்த்திய ஆட்டோ பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதற்கமைய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக இது தொடர்பான விசாரணை மேற்கொள்ளும் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரி பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கு அமைய குறித்த பொலிஸ் அதிகாரியை தற்காலிகமாக சேவையில் இருந்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

# தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு சென்றவரை மதுபானம் வாங்க அனுப்பிய சாரதி

(கொழும்பு)

வெளிநாடு ஒன்றில் இருந்து வந்த நிலையில் தனிமைப்படுத்தலுக்கு அழைத்து செல்லப்பட்ட இளைஞனை அழைத்துச்சென்ற சாரதி மதுபானம் வாங்க அனுப்பிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் குறித்த அம்புலன்ஸ் சாரதியின் செயற்பாடு தொடர்பில் குளியாப்பிட்டிய வைத்திய அத்தியட்சகர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த சாரதி தனது உதவியாளரிடம் மதுபானம் வாங்கி வருமாறு கூறியுள்ளார். எனினும் அவர் அதனை விரும்பாமையினால் தனிமைப்படுத்தலுக்கு அழைத்து செல்லப்பட்ட இளைஞனை அனுப்பி மதுபானம் பெற்றுள்ளதாகவும் அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ஜ-4)

# போலிச் செய்தி மேலும் ஒருவர் கைது




(கொழும்பு)

கொரோனாவினால் இறந்தவர்களின் சடலங்கள் வீதியில் கிடப்பதாக போலியான செய்தியை வெளியிட்ட குற்றச்சாட்டில் கண்டி ஹந்தானை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஏற்கனவே கொரோனா சடலங்கள் வீதியில் கிடப்பதாக பதிவிட்ட கடுகண்ணாவையை சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே மற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை போலிச்செய்திகளை பிரசுரித்தமை தொடர்பில் மேலும் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்களை கைது செய்யும் நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# விழாக்கள் வேண்டாம் ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டு ஓராண்டு பூர்த்தியாகும் நிலையில் அது தொடர்பிலான விழாக்கள் எதனையும் நடத்த வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்று நாளை 18 ஆம் திகதி ஓராண்டு பூர்த்தியாகின்றது.

தமக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்புவோர் எவ்வித நிகழ்வுகளையும் செய்ய வேண்டாம் எனவும் வீண் செலவுகளை செய்ய வேண்டாம் எனவும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, நாளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்த உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (ஜ-4)

# பாடசாலைகள் திறப்பு கலந்துரையாடித் தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலைகளில் மூன்றாம் தவணை கற்றல் நடவடிக்கைகளுக்காக பாடசாலைகளை எதிர்வரும் திங்கட்கிழமை திறப்பதா, இல்லையா என்பது குறித்து சுகாதார தரப்பினருடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கைதிகளுக்கு வைத்தியசாலைகள்



(கொழும்பு)
சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படும் கைதிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக சில வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலநறுவை, கல்லேல்ல, கந்தகாடு மற்றும் வெலிகந்தை பிரதேசங்களில் இந்த வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகளில் கண்டறியப்படும் கொரோனாத் தொற்றாளர்கள் புதிதாக சிறைச்சாலைகளில் அடைக்கப்படும் கைதிகள் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# நாட்டை சிறப்பாக நிர்வகிக்கும் ஜனாதிபதி

## திஸாநாயக்க புகழாரம்

(கொழும்பு)
**மக்கள் மீது சுமைகளை ஏற்றாது நாட்டை நிர்வகித்துச் செல்லும் அளவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலுவாக இருக்கின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.**

கொரோனாவை கட்டுப்படுத்துவதில் இலங்கையை விட ஒரு புள்ளியைப் பெற்றிருக்குமாயின் அது சீனா மாத்திரமே என்றும் அத்துடன் கொரோனாவின் இரண்டாவது அலை தற்போது முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

முதலாவது சுற்றில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் நாங்கள் உலகில் முதலாம், இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டோம்.



உலகில் அப்படி புள்ளிகளை வழங்கும் போது இலங்கையை விட ஒரு புள்ளியை அதிகமாகச் சீனா மாத்திரமே பெற்றுக்கொண்டது. சீனாவுக்கு அடுத்ததாக இலங்கையே இருந்தது.

உலகில் உள்ள ஏனைய அனைத்து நாடுகளும் எமக்கு கீழேயே இருந்தன. முழு உலகமும் தோல்வியடையும் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தூரநோக்கு பார்வை காரணமாக நாம் வெற்றியின் உச்சத்தில் இருந்தோம்.

கொரோனா வைரஸின் இரண்டாவது அலை ஏற்பட்டது. சிறிது சிறிதாக பாரதூரமாகப் பரவியது. தற்போது அது முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் கூற விரும்புகிறேன். (ஜ-4)

# கொரோனா எதிரொலி வாடும் பூ வியாபாரம்



(கொழும்பு)
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பூ வியாபாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பூந்தோட்டங்களில் இருந்து பெறப்படும் பூக்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடப்பதே இதற்கு காரணமாகும்.


வெலிமட, ஊவா பரணகம, பொரலந்த, கெப்பெடிபொல, தியதலாவ, பண்டாரவெல, நுவரெலியா ஆகிய பல பிரதேச பூ உற்பத்தியாளர்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அவர்களின் முக்கிய ஜீவனோபாய தொழிலாக இந்த பூக்கள் விற்பனையே காணப்படுகிறது. மேலும், திருமணங்கள், மரணச் சடங்குகள் மற்றும் பிற விழாக்களுக்காகவும் அலங்கார பணிகளுக்காகவும் இவர்கள் பூக்களை விற்பனை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மஞ்சள் இறக்குமதி தடை இந்திய வர்த்தகர்கள் பாதிப்பு

(கொழும்பு)
நாட்டில் மஞ்சள் தூள் இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய வர்த்தகர்களுக்கு சுமார் 50 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக 'த டைம்ஸ் ஒப் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழகம் ஈரோடில் அதிகளவில் மஞ்சள் வர்த்தகம் இடம்பெறுகின்ற நிலையில், அங்கிருந்து கடந்த காலங்களில் இலங்கைக்கு மஞ்சள் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது.



எனினும் இலங்கையில் தற்போது மஞ்சள் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், அது தமிழகத்தில் உள்ள மஞ்சள் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களை கடுமையாகப் பாதித்திருப்பதாக, ஈரோடு மஞ்சள் வணிகர்கள் சங்கத்தின் செயலாளர் எம். சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.


கடந்த காலங்களில் அங்கிருந்து வருடாந்தம் சுமார் 7500 தொன் மஞ்சள் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இரு பெண் விமானிகள்

(கொழும்பு)
இலங்கை விமானப்படை வரலாற்றில் முதல் முறையாக இரண்டு பெண் அதிகாரிகள் விமானிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சீனக்குடா விமானப்படைத் தளத்தில் நேற்று நடைபெற்ற 61 ஆவது அதிகாரிகளின் கேடட் கமிஷனிங் மற்றும் விங்ஸ் அணிவகுப்பின் போது இரண்டு பெண் அதிகாரிகள் விமானிகளாக நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை விமானப்படை அறிவித்துள்ளது. (ஜ-4)

# காலம் நீடிப்பு



(கொழும்பு)
துப்பாக்கி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் மற்றும் தனியார் பாதுகாப்பு பிரிவிற்கான அனுமதியளித்தல் என்பவற்றுக்கான இறுதித்திகதி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ஜ-4)

# சுற்றுலாத்துறை சாரதிகளுக்கு அறிவிப்பு



(கொழும்பு)
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பாதிப்படைந்துள்ள சுற்றுலாத்துறை சார்ந்த வாகன சாரதிகளுக்கு 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்துமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதற்காக தகைமையுடைய மற்றும் விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்பட்ட அனைவருக்கும் குறித்த கொடுப்பனவை அடுத்த வாரத்திற்குள் வழங்கி முடிக்குமாறு குறித்த அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு அமைச்சர் மேலும் ஆலோசனை வழங்கியுள்ளார். (ஜ-4)

# கமத்தொழில் பொருளாதார நிலையம் பொலநறுவையில் அமைக்க நடவடிக்கை

(பொலநறுவை)

பொலநறுவை - கல்லேல்ல பிரதேசத்தில் 700 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள கமத்தொழில் பொருளாதார மத்திய நிலையமொன்று ஸ்தாபிக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பொலநறுவை மாவட்ட செயலக காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாழ்வாதார அபிவிருத்திக் குழு கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொலநறுவையை சுற்றுலாத் தளமாக அபிவிருத்தி செய்வதற்காக இதுவரை கலாசார அமைச்சு, தொல்பொருள் திணைக்களம் மற்றும் மத்திய கலாசார நிதியத்துடன் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை இணைந்து இதுவரை வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. இதற்கு மேலதிகமாக சுற்றுலா ஹோட்டல் பாடசாலையொன்றை பொலநறுவை மாவட்டத்தில் அடுத்த ஆண்டிற்குள் ஆரம்பிப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.(நி-4)

# வாகனக் காட்சியறைக்குள் புகுந்த கார்



(கொழும்பு)

கொழும்பில் கார் ஒன்று கார்களின் காட்சியறைக்குள் புகுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் கொழும்பில் உள்ள நெளும் பொக்குணவிற்கு அருகே உள்ள நந்தா மோட்டார்ஸ் வாகன காட்சியறையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த காட்சியறையில் டொயொடா SUV கார் ஒன்றே இவ்வாறு மோதி உள்ளே புகுந்துள்ளது.

மேலும் உள்ளே புகுந்த வேகத்தில் அங்கு தரித்து நின்ற பல வாகனங்களை மோதி சேதத்துக்கு உள்ளாகியது. (நி-4)

## தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால்

# 100 ஆவது இடத்திற்கு முன்தள்ளப்பட்ட இலங்கை

(கொழும்பு)

உலகளவில்கொரோனா தொற்று பதிவாகும் நாடுகள் பட்டியலில் இலங்கை 100 ஆவது இடத்தில் உள்ளது. உலக கொவிட் தொற்று தொடர்பிலான தகவல்களை வெளியிடும் இணையத்தளத்தின் தரவுகளுக்கு அமைய, ஒக்டோபர் மாத ஆரம்பத்தில் 146 ஆவது இடத்தில் இலங்கை இருந்துள்ளது.

எனினும், மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பதிவான கொவிட் தொற்றாளர்கள் மற்றும் பேலியகொட கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், இலங்கை பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது.

கொரோனாத் தொற்றினால் அதிக பாதிப்புக்களைக் கொண்ட நாடுகளில் முறையே அமெரிக்கா, இந்தியா, பிரேஸில், பிரான்ஸ், ரஷ்யா, ஸ்பெயின், பிரித்தானியா, ஆர்ஜென்டீனா, கொலம்பியா, இத்தாலி ஆகியன காணப்படுகின்றன. (நி-4)

# பொருளாதாரத்தை மீட்க அரசு தீவிர கவனம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேவேளை பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

இதன்படி பெருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக நான்கு உப குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் என 32 பேர் அக்குழுக்களில் அங்கம் வகிக்கின்றனர்.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக கிராமிய பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் அடிப்படையில் அரச பொறிமுறையை கிராமத்தை நோக்கிக் கொண்டு செல்வது இதன் பிரதான நோக்கமாகும். அதற்காகவே உப குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் சென்று மக்கள் குறைகளைக் கேட்டறிந்து அது தொடர்பில் இந்தக் குழுக்கள் அறிக்கையிட வேண்டும்.

தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் முக்கிய பொறுப்பு அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலுடன் இதற்கான நடவடிக்கைகள் இடம்பெறும். (நி-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வேலை பிடித்திருக்கின்றதா?

ஒருத்தர் இருக்கின்றார். அவர் நல்ல உத்தியோகத்திலே இருக்கின்றார். ஆனால் எப்பொழுது பார்த்தாலும் முகத்தை வெறுப்பாக வைத்திருப்பார். ஏன் சேர் இப்படி இருக்கின்றீர்கள்? என்று விசாரித்தேன். ஏன்டா இந்த வேலைக்கு வந்தோம் என்று இருக்கின்றது என்றார். உங்கள் வேலை உங்களுக்குப் பிடிக்கவில்லையா? என்று கேட்டேன். இல்லை என்றார்.

இப்படிப்பட்டவர்கள் வெற்றிகரமான வாழ்க்கை வாழ முடியாது. இது நிபுணர்கள் கருத்து. வேலையை நேசிக்கத் தெரிந்தவர்கள் வெற்றி பெறுவார்கள் என்கின்றார் அவர். எந்தத் துறையாக இருந்தாலும் சரி... அந்தத் துறையில் வெற்றிகரமாக இருக்கின் றவர்களை விசாரித்துப் பாருங்கள்.

எனக்கு என் வேலை மிகவும் பிடிக்கும் என்று சொல்கின்றவர்களாகத் தான் இருப்பார்களாம் அவர்கள். ஒருத்தனுக்கு பிடித்த மான பொழுது போக்கே அவனுடைய தொழிலாக இருந்து விட்டால் அவனை மாதிரி கொடுத்து வைத்தவன் வேறு யாரும் இல்லை என்கின்றார் பெர்னார்ட்ஷோ.

ஒரு தடவை மன்னர் ஹுமாயுன் உயிரை, தண்ணீர் மொண்டு ஊற்றுகிற தொழிலாளி ஒருத்தர் காப்பாற்றினாராம். உடனே மன்னர் கேட்டிருக்கின்றார்...உனக்கு என்ன வேண்டும் என்றாலும் கேள்... தருகின்றேன்....உயர் பதவி வேண்டுமா? என்று கேட்டாராம்.

மன்னா மக்களின் தாகம் தீர்க்கக் கூடிய இந்தப் பணியைவிட உயர்ந்தது உண்டா? என்றாராம் அந்தத் தொழிலாளி. அவரால் அவருடைய வேலையை நேசிக்க முடிந்தது. அதனால் மகிழ்ச்சியாக இருக்க முடிந்தது. நாங்கள் எல்லாம் அப்படி இல்லை. வேலை கிடைக்கின்ற வரைக்கும் கிடைத்தால் போதும் என்று இருக்கும். கிடைத்தற்குப் பின்பு ஏன்டா இந்த வேலைக்கு வந்தோம் என்று மிகவும் அலுத்துக் கொள்வோம்.

சரி... நாம் இருக்கின்ற இடத்திலே நாம் வெற்றிகரமாக இருக்க வழி உண்டா? உண்டு. முக்கியமாக ஆறு வழிகள் சொல்கின்றார் கள் மனவியல் நிபுணர்கள். நீங்கள் ஒரு அலுவலகத்திலே வேலை பார்க்கின்றவரா? அப்படி என்றால் இதைக் கேளுங்கள். உங்கள் மேலதிகாரி எதிர்பார்ப்புக்குத் தகுந்த மாதிரி உங்கள் வேலை இருக்கின்றதா? அப்படி இல்லை என்றால் முதலிலே உங்கள் வேலையின் தரம் உயர வேண்டும்.

உங்களுக்கு மேலே, கீழே வேலை பார்க்கின்ற பணியாளர்க ளிடம் நல்ல விதமாக பழகுகின்றீர்களா? அந்த உறவு முறையில் ஏதாவது குறை இருந்தால் அதைக் கண்டு பிடித்து சரி செய்யுங் கள். நம்பிக்கைக்கு உரியவர் என்று நீங்கள் பேர் எடுக்க வேண்டும். நீங்கள் எடுக்கின்ற முடிவு நல்ல முடிவாகத்தான் இருக்கும் என்று அடுத்தவர்கள் சொல்ல வேண்டும்.

உங்கள் தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள். இது, மனம், உடல் இரண்டும் சம்பந்தப்பட்டது. அதனால் மனதையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவேண்டும். உடம்பையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

உங்களுடைய நிர்வாகம் செயற்படுகின்ற விதத்தை நல்லாப் புரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

உங்களுடைய நிர்வாகம் இப்பொழுது ஒரு காரியம் செய்கின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஏன் அப்படி செய்கின்றது? எதற்காக அப்படி செய்வது? அதனுடைய குறிக்கோள் என்ன? அது நீடிப்பதற்கு காரணம் என்ன? இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். சிரிப்பிற்கு வஞ்சகம் செய்யாதீர்கள்... நன் றாகச் சிரிக்க வேண்டும். அப்பொழுதுதான் அது திரும்பக் கிடைக் கும். கடந்த கால தோல்வியைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். முதலாளி விருப்பம் தெரிந்து நடந்து கொள்வது நல்லது தான். அதற்காக காக்கா பிடிக்க வேண்டும் என்கின்ற அவசியமில்லை. உங்களுக்கு ஒரு பொறுப்பான வேலை கிடைக்கின்றது. உடனே சத்தம்–குழப்பம் என்று சூழ்நிலையை இறுக்கமாக ஆக்கிவிடக் கூடாது. எந்தச் சூழலையும் இயல்பாக கையாளக் கூடியவர் என்பதைக் காட்ட வேண்டும்.

இதெல்லாம் உங்கள் துறையில் நீங்கள் வெற்றி பெற நிபுணர்கள் சொல்கின்ற யோசனைகள். இவ்வளவு விபரமும் நான் சொல்லிவிட்டு ஒருத்தரைப் பார்த்துக் கேட்டேன்...இப்பொழுது சொல்லுங்கள் நீங்கள் செய்கின்ற வேலை உங்களுக்குப் பிடித்திருக்கின்றதா? என்றேன். மிகவும் பிடித்திருக்கின்றது என்றார். சரி... என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டேன்...சும்மா தான் இருக்கின்றேன் என்றார் அவர்.

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

**20**

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



உப ஜனாதிபதி மைக் பென்ஸ் பதில் ஜனாதிபதியாகும்போதும், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியிலிருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 1985 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் திகதி ஜனாதிபதி றொனால்ட் றீகன் புற்றுநோய் சிகிச்சைக்குள்ளாகும்போது அப்போதைய உப ஜனாதிபதியான ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ் ஏறத்தாழ எட்டு மணித்தியாலங்கள் பதில் ஜனாதிப்தியாக இருந்தார்.


இதேவேளை, 2002 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் திகதி ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் சிகிச்சைக்குள்ளாகும் போது தனது அதிகாரங்களை உப ஜனாதிபதி டிக் செனியிடம் கையளித்திருந்தார். சிகிச்சைக்குள்ளான அன்று காலை 2 மணித்தியாலங்கள் வரையில் டிக் செனி பதில் ஜனாதிபதியாக இருந்தார்.

இந்நிலையில், 2007 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி இன்னொரு சிகிச்சைக்கு ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் உள்ளாகும்போது, அன்று காலை 2 மணித்தியாலங்கள் வரை டிக் செனி பதில் ஜனாதிபதியாக இருந்திருந்தார்.

எனவே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு, இயலாது போனால் அவர் தனது உப ஜனாதிபதி மைக் பென்ஸிடம் பொறுப்பைக் கொடுக்கலாம்.

### அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் "தேர்வு செய்வோர் அவை" (Electoral College) யின் தொழிற்பாடு

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி "தேர்வு செய்வோர் அவை" (தேர்தல் கல்லூரி) ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுகின்றார் என்று முன்னர் கூறியிருந்தேன். "தேர்வு செய்வோர் அவை" யானது காங்கிரசின் இரு சபைகளின் அங்கத்தவர்களுக்கு சமமான உறுப்பினர்களையும் இதைவிட வோஷிங்டன் -DC யிலிருந்து 3 அங்கத்தவர்களையும் கொண்டிருக்கும் ஒரு அவையாகும். தற்போது இதன் எண்ணிக்கை 538 ஆகும். செனட் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சமனாக 100 அங்கத்தவர்களும் பிரதிநிதிகள் சபையின் உறுப்பிளர்களின் எண்ணிக்கைக்கு சமனாக 435 அங்கத்தவர்களும் மற்றும் 03 அங்கத்தவர்கள் வோஷிங்டன் -DC யிலிருந்தும் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.




538 "தேர்வு செய்வோர் அவை" உறுப்பினர்களில் சாதாரண பெரும்பான்மையாகிய 270 "தேர்வு செய்வோர் அவை" உறுப்பினர்களின் ஆதரவை ஒருவர் பெற்றால் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். "தேர்வு செய்வோர் அவை" உறுப்பினர்களின்/ தேர்வாளர்களின் தேர்தல் நவம்பர் மாதத்தின் முதலாவது திங்களை அடுத்து வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும். தனிப்பட்ட வாக்காளர்களின் வாக்குகள் மாநில ரீதியாக எண்ணப்பட்டு ஒவ்வொரு மாநிலத்திலும் ஜனாதிபதி தேர்வாளர்கள் பெற்ற பெரும்பான்மை வாக்குகள் அறிவிக்கப்படும்.

இதன் பின்னர் ஜனாதிபதித் தேர்வாளர்கள் தமது மாநிலத் தலைநகரங்களில் டிசெம்பர் மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை ஒன்றாகக்கூடி தமது வாக்குகளை தமது ஜனாதிபதி வேட்பாளருக்கு அளிக்கின்றனர். இவர்களுக்கு இரண்டு வாக்குகள் வழங்கப்படும். இதில் ஒன்றை ஜனாதிபதிக்கும் மற்றையதை உப ஜனாதிபதிக்கும் வழங்கலாம். பின்னர் வாக்குப் பெட்டிகள் மூடப்பட்டு செனட் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும். வாக்குகள் எண்ணும் பணி ஜனவரி 6 ஆம் திகதி நடைபெற்று தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி 20 ஆம் திகதி உயர் நீதிமன்ற, தலைமை நீதிமன்ற நீதிபதி முன்பாக சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார்.

நாட்டில் பதிவான வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று, அதே சமயத்தில் சில மாநிலங்களில் தோற்றதன் மூலம், இந்த தேர்வு செய்வோர் அவை வாக்குகளில் தேவைப்படும் 270 வாக்குகளைப்பெற முடியாமல் போனால், வெற்றி வாய்ப்பை இழக்க நேரிடலாம் என்றும் முன்னர் கூறியிருந்தேன். இதுபற்றி கீழே பார்ப்போம்.

அமெரிக்க ஜனாதிபதியும் பிரபலமான வாக்குகளும் (**President Vs Popular votes**)

நெப்ராஸ்கா மற்றும் மைனே தவிர அனைத்து மாநிலங்களிலும், அனைத்து தேர்வுச் சபை பிரதிநிதி வாக்குகள் (**Electors**) அந்த மாநிலத்தில் பெரும்பான்மை வாக்குகளை வென்ற கட்சிக்கு வழங்கப்படுகின்றது. இதை சிறிது விபரமாகப் பார்ப்போமானால் வெற்றி பெறுபவர் எல்லாவற்றையும் பெறுவார் (**Winner-takes-all**) என்ற தேர்தல் முறைமையில் தேர்வு செய்வோர் அவைக்கு (**Electoral College**) ஒரு மாநிலத்தின் தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்களைத் (**electors**) தேர்ந்தெடுப்பது ஒரு வெற்றியாளர் (ஜனாதிபதி வேட்பாளரும் மற்றும் துணை ஜனாதிபதி வேட்பாளரும்) எடுத்துக்கொள்ளும் வாக்குகள் அடிப்படையில் வழங்கப்படுகிறது. வாக்காளர்கள் (**voters**) நேரடியாக தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்களுக்கு (**electors**) வாக்களிக்க மாட்டார்கள்.

மாறாக அதற்கு பதிலாக தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் (**electors**) உறுதி மொழி அளிக்கும் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி வேட்பாளர் அணிக்கு வாக்களிப்பர். அதிக வாக்குகளைப் பெற்ற அணிக்கு உறுதியளிக்கப்பட்ட தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் (**electors**) அனைவரும் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இம்முறைமை மைனே மற்றும் நெப்ராஸ்கா மாநிலங்களைத் தவிர்ந்த மற்றைய 48 மாநிலங்களிலும் பயன்படுத்துகின்றன.

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மாநில மட்டத்தில் மக்கள் வாக்களிப்பது ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு. அதன் மூலம் தெரிவு செய்யப்படுவது மாநில தேர்வுச் சபை பிரதிநிதிகள். தெரிவு செய்யப்பட்ட எல்லா மாநிலங்களின் தேர்வுச் சபை பிரதிநிதிகளும் ஒன்று கூடி ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதியைத் தெரிவு செய்கிறார்கள்.**

(உரு-1 ஐப் பார்க்க).

மைனே மற்றும் நெப்ராஸ்கா மாநிலங்களில் தேர்வுச் சபை பிரதிநிதி வாக்குகளை ஒதுக்க சற்று வித்தியாசமான முறையைப் பயன்படுத்துகின்றனர். "காங்கிரஸின் மாவட்ட முறை" யில், ஒவ்வொரு காங்கிரஸ் மாவட்டத்திலும் ஒரு பிரதிநிதி அந்த மாவட்டத்தில் மக்கள் வாக்களிப்பால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதே முறையே மைனே மற்றும் நெப்ராஸ்கா மாநிலங்களில் தேர்வுச் சபை பிரதிநிதி வாக்குகள் தேர்வுக்கும் பயன்படுத்துகிறார்கள். மீதமுள்ள இரண்டு தேர்வுச் சபை பிரதிநிதி வாக்குகள் (2. செனட் இடங்களைக் குறிக்கும்) மாநிலம் தழுவிய மக்கள் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த முறை 1996 முதல் நெப்ராஸ்காவிலும், 1972 முதல் மைனிலும் பயன்படுத்தப்படுகிறது.

உதாரணமாக உரு-1 இன் விளக்கத்தைப் பார்ப்போம். மாநிலம் **x** இல் ஜனாதிபதியைத் தெரிவதற்கான தேர்வாளர் எண்ணிக்கை (**Electoral College**) 4 என எடுப்போம். அம் மாநிலத்தில் கட்சி அணி **A** பெற்ற வாக்குகள் 60,000 ஆகவும் கட்சி அணி **B** பெற்ற வாக்குகள் 40,000 ஆகவும் இருந்தால், கட்சி அணி **A** அதிகூடிய வாக்குகளைப் பெற்ற காரணத்தால் தேர்வுச் சபை உறுப்பினர்கள் நால்வரும் கட்சி அணி **A** இற்கு வழங்கப்படும் இது போலவே மற்றைய மாநிலங்களான **Y,Z,P** இற்கும் வழங்கப்படுவதால் மொத்தமாக கூடுதலான வாக்குகளைப் (**Popular votes**) பெற்ற கட்சி அணி **A** தோல்வி பெறுகின்றது.

### வெற்றியாளர் ஜனாதிபதி பொறுப்பை எப்போது ஏற்பார்?

வெற்றி பெற்ற ஜோ பிடன் ட்ரம்பின் இடத்திற்கு உடனடியாக வர மாட்டார். புதிய அமைச்சர்களை நியமனம் செய்யவும், திட்டம் தீட்டவும், அவருக்கு சிறிது காலம் வழங்கப்படும். வோஷிங்டன் டிசியில் உள்ள கேபிடல் கட்டடத்தில் ஜனவரி 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதி அதிகாரபூர்வமாக பதவி ஏற்றுக்கொள்வார். அதனைத் தொடர்ந்து தனது நான்கு ஆண்டு காலப் பணியைத் தொடங்க புதிய ஜனாதிபதி வெள்ளை மாளிகைக்கு செல்வார்.

**President Vs Popular votes (உரு-1)**

**ஒரு நாட்டின் அதிபரும் பிரபலமான வாக்குகளும்**

| மாநிலம் | மாநில தேரவாளர் எண்ணிக்கை | கட்சிகள் பெற்ற வாக்குகள் | | கட்சிகள் பெற்ற தேர்வாளர்கள் வாக்குகள் | |
|---|---|---|---|---|---|
| | | கட்சி A | கட்சி B | கட்சி A | கட்சி B |
| X | 4 | 60000 | 20000 | 4 | 0 |
| Y | 5 | 48000 | 52000 | | 5 |
| Z | 10 | 98000 | 102000 | | 10 |
| P | 7 | 34000 | 36000 | | 7 |
| நாடு | 26 | 240000 | 210000 | 4 | 22 |

நாட்டின் அதிபராக அதிகூடிய தேர்வாளர் வாக்குகளைப் பெற்ற (22) கட்சி B ஐச் சேர்ந்த வேட்பாளர் தெரிவுசெய்யப்படுவார். ஆனால் முழு நாட்டிலும் அதி கூடிய வாக்குகளைப் (240,000) பெற்றவர் கட்சி A ஐச் சார்ந்தவராகும்.

(முற்றும்)


# சுயதனிமைப்படுத்தலில் 30 ஆயிரம் பேர்
## 2 ஆயிரத்து 950 பேர் தனிமைப்படுத்தல் முகாம்களில்

(கொழும்பு)

முப்படையினரால் நிர்வகிக்கப்படும் 31 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 2950 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தவிடயத்தை கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இதுவரை தொற்றுக்குள்ளானவர்களின் முதலாவது மற்றும் இரண்டாவது தொடர்பாளர்கள் சுமார் 30 ஆயிரம் பேர் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.



இதேவேளை, இலங்கையில் கடந்த இரு நாட்களில் அதிக மானவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு
## ஏன்–எதற்கு – எப்படி
### கருவறையின் தேவ இரகசியம்

மனிதனுக்கு தலைதான் பிரதானம். தலையில் இருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் உடலில் மற்ற அங்க அவயங்களைச் செயற்பட வைக்கிறது. இதே மாதிரிதான் ஆலய அமைப்பும் உள்ளது. உடலுக்கு தலை பிரதானம் போல ஆலயங்களுக்கு கருவறை பிரதானமாக உள்ளது. இதை மூலஸ்தானம், கர்ப்பக்கிரகம் என்றும் சொல்வார்கள்.

நமது உடல் பிரமாண்டமாக இருந்தாலும் தலை சிறியதாகத்தான் இருக்கும். அது மாதிரிதான் ஆலயங்கள் எத்தனை பெரிதாக இருந்தாலும் கருவறை சிறியதாகவே இருக்கும். இதன் பின்னணியில் சூட்சுமங்களும் தேவ இரகசியமும் அடங்கியுள்ளன.

வாஸ்து கணக்கு பிரகாரம் நீள, அகல, உயரங்களை மிகத் துல்லியமாக கணக்கிட்டு ஆலயங்களை உருவாக்கிய நம் முன்னோர்கள் பிரபஞ்ச சக்திகளை கிரகிக்கும் பகுதியாக கருவறையை அமைத்தனர். பிரபஞ்சத்தில் உள்ள கதிர்கள் எல்லாம் ஒரு வகை மின்னூட்டம் பெற்ற துகள்களாகும். இந்த அலைகள் கோவில் கருவறை விமானம் மீதுள்ள கலசங்கள் மூலம் கருவறைக்குள் இருக்கும் மூலவர் மீது பாயும்.

பிறகு அங்கிருந்து அந்த அலைகள் ஆலயம் முழுக்க விரவிப் பரவும். எனவே தான் ஆலயங்களுக்கு செல்லும்போது நமது ஆற்றல் அதிகரிக்கிறது. இதற்காகவே நம் முன்னோர்கள் கருவறை அமைப்பதில் மட்டும் அளவு கடந்த நுட்பத்தை கடைப்பிடித்தனர்.

எல்லா ஆலயங்களிலும் கருவறையானது வாசல் தவிர மற்ற அனைத்துப் பகுதிகளும் மூடப்பட்டதாக இருக்கும். கருவறை அமைப்பை 6 பகுதிகளாகப் பிரிக்கலாம்.

அவை 1.அதிஷ்டானம், 2.பாதம், 3.மஞ்சம், 4.கண்டம், 5.பண்டிகை, 6.ஸ்தூபி எனப்படும். இதில் மூலவர் சிலை நிறுவப்படும் பகுதியை அதிஷ்டானம் என்பார்கள். பீடம் என்றும் சொல்வதுண்டு.

கருவறையின் வெளிப்புறச்சுவரை கோஷ்டம் என்பார்கள். அவற்றில் பல்வேறு கடவுள் உருவங்கள் இடம்பெற்றிருக்கும்.

ஒரு கோவில் எந்த மூர்த்திக்கு உரியதோ அந்த மூர்த்தியை அங்கு பிரதிஷ்டை செய்திருப்பார்கள். அது மட்டுமன்றி அந்த கருவறை எத்தனை ஆண்டுகளைக் கடந்தாலும் இறை அருளை அள்ளித்தரும் பொக்கிஷமாக இருக்கவும் வழிவகுத்திருந்தார்கள்.

இந்த நடைமுறை 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அதாவது ஆகம வழிபாட்டு முறைகளுக்கும் முன்பே தோன்றி விட்டது. அந்தக் காலகட்டத்தில் நாட்டை ஆண்ட மன்னர்கள் தங்களது அரண்மனையை விட அருள் அலை தரும் கோவில்கள் எப்போதும் உறுதியாக நின்று நிலைபெற்றுத் திகழ வேண்டும் என்ற எண்ணத்தில் கற்களால் ஆன கருவறையைக் கட்டினார்கள். அவர்கள் பெருங்கோவில், மாடக்கோவில், கரக்கோவில், ஞாழற் கோவில், கொகுடிக் கோவில், இளங்கோவில், மணிக்கோவில், ஆலக்கோவில் என்று 8 வகைக் கோவில்களைக் கட்டினார்கள்.

ஆனால் கருவறை பகுதி சதுரம், வட்டம், முக்கோணம் எனும் 3 வித அமைப்புகளில் அமைக்கப்பட்டன.

இதில் சதுர அமைப்பு தேவ உலகத்துடனும் வட்டம் இறந்தவர்களுடனும் முக்கோணம் மண்ணுலகத்துடனும் தொடர்புடையதாகக் கருதப்படுகின்றன.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## ரிஜ்வே வைத்தியசாலையில் ஒருவருக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

கொழும்பு- சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிக்குழாமின் பணியாளர் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், இவரின் சகோதரர் ஒருவருக்கு ஏற்கனவே கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்திய சாலையின் பணிப்பாளர் பி.விஜயசூரிய தெரிவித்துள்ளார். குறித்த வைத்தியசாலையில் மருத்துவர் உள்ளிட்ட 14 பணிக்குழாமினருக்கு இதுவரை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## 42 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 42 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றாமை தொடர்பில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் குறித்த குற்றம் தொடர்பில் இதுவரையில் 263 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## 92 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

நாட்டிற்கு வருகை தர முடியாமல் வெளிநாடுகளில் சிக்கியிருந்த 96 பேர் நேற்று நாடு திரும்பினர். ஐ.நா.அமைதி காக்கும் படையில் பணியாற்ற சூடான் சென்ற இராணுவ அதிகாரிகள் 79 பேரும் கட்டாரிற்கு தொழிலுக்காக சென்ற 12 பேரும் பாகிஸ்தானில் தங்கியிருந்த 5 பேரும் நாடு திரும்பினர். இவ்வாறு வருகை தந்த அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 160 | 160 |
| தக்காளி | 120 | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 90 | 60 |
| கோவா | 60 | 70 | 100 | 120 |
| கரட் | 120 | 180 | 200 | 240 |
| பூசணி | 60 | 50 | 50 | 80 |
| புடோல் | 70 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 170 | 220-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 200 |
| பாகற்காய் | 250 | 250 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 260 | 250 | 250 | 280 |
| லீக்ஸ் | 60 | 100 | 90 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 180 | 180 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 170 | 140 | 140 | 180 |
| கீரை - 1 பிடி | 70 | 40 | 40 | 60 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 75-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | --- | 220 | 240 |
| வெங்காயப்பூ | 250 | 300 | --- | --- |
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 10 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | --- | 100 |




## கழுதையின் தந்திரம்



வியாபாரி ஒருவர் உப்பு வாங்குவதற்காக கழுதையைக் கடற்கரைக்கு ஓட்டிச் சென்றார். கடற்கரைக்குச் செல்லும் வழியில் ஒரு ஓடை இருந்தது. அந்த வியாபாரி உப்பை வாங்கிக் கழுதையின் மீது ஏற்றி வைத்துக் கொண்டு அந்த ஓடையைக்கடந்து செல்ல முற்பட்டபோது கால் தவறிக் கழுதை ஓடையில் விழுந்தது.

ஓடையில் விழுந்ததால் கழுதையின் மேலிருந்த உப்பு மூட்டையில் இருந்த உப்பில் பாதி அளவு தண்ணீரில் கரைந்து போயிற்று.

ஓடையில் விழுந்த கழுதை தட்டுத்தடுமாறி எழுந்த போது மூட்டையின் கனம் மிகவும் குறைந்தது.

வியாபாரி திரும்பிப்போய், இன்னும் கூடுதலாக உப்பைத் தனது கோணிகளில் நிரப்பிக் கழுதையின் மேல் பாரத்தை ஏற்றி வைத்து அழைத்து வந்தான்.

ஓடையை நெருங்கியதும் கழுதை வேண்டுமென்றே மீண்டும் விழுந்து தனது பாரத்தைக் குறைத்துக் கொண்டது. எனவே அது வெற்றிகரமாகக் கனைத்தது.

வியாபாரிக்குக் கழுதையின் தந்திரம் புரிந்து போகவே, மூன்றாம் முறையாக கடற்கரைக்கு அதை ஓட்டிச்சென்றான்.

அங்கே உப்புக்கு பதிலாகக் கடற்பஞ்சு மூட்டைகளை வாங்கி கழுதையின் மேல் பாரத்தை வைத்தான். ஓடையை அடைந்ததும், மீண்டும் அதே தந்திரத்தைக் கழுதை செய்தது.

ஆனால் கடற்பஞ்சு தண்ணீரை உறிஞ்சிக்கொண்டு மிகவும் கனத்துப் போனது. தான் செய்த தந்திரம் தன்மீதே பாயவே, கழுதை இரண்டு மடங்கு பாரத்தைச் சுமக்க வேண்டியதாயிற்று.

**நீதி: தெரிந்தே தவறு செய்யக் கூடாது.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஆசான் அரிஸ்ரோட்டில்

**27**



நேராக உங்களிடம் தான் வருவோம். தங்களின் ஆலோசனைப்படியே முடிவெடுப்போம் என்றனர் மாணவர்கள்.

அலெக்சாண்டரின் பக்கம் பார்வையைத் திருப்பினார் அரிஸ்ரோட்டில். நிச்சயமாக உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கமாட்டேன். சூழ்நிலையைப் புரிந்துகொள்வேன். நாட்டின் தேவைக்கேற்ப சிந்தித்து முடிவெடுக்கத் தேவையான அறிவை, ஆற்றலை நீங்கள் கல்வி மூலம் வழங்கிவிட்டீர்கள். எனவே நான் சுயமாகவே முடிவெடுத்து விடுவேன்.

அலெக்சாண்டரிடம் இருந்து வந்த பதில் அரிஸ்ரோட்டிலைப் பெருமிதம் கொள்ள வைத்தது. மன்னர் பிலிப் இதைக் கேட்டால் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்? உடனடியாக மன்னர் பிலிப்பைச் சந்திக்கச் சென்றார் அரிஸ்ரோட்டில்.

அகாடமியில் நடந்த சம்பவங்களை எல்லாம் விரிவாக எடுத்துச் சொன்னார். மன்னர் பிலிப்புக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அரிஸ்ரோட்டிலுக்கு நிறையப் பரிசுகளைக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

உடனடியாக அலெக்சாண்டருக்குக் கடிதம் எழுதினார். மரியாதைக்குரிய அரிஸ்ரோட்டில் அரண்மனைக்கு வந்து என்னைச் சந்தித்தார். உன்னைப் பற்றிய நல்ல விடயங்களை என்னிடம் எடுத்துச் சொன்னார்.

அதைப்பாராட்டும் விதமாக உனக்கு இரண்டு பதவிகள் தயாராக இருக்கின்றன. அரச பிரதிநிதி மற்றும் முத்திரைக் காப்பாளர். இரண்டுமே அரசு நிர்வாகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பதவிகள் உடனே வந்து அவற்றை ஏற்றுக் கொள்ளலாம்.

அலெக்சாண்டருக்குக் கடிதம் எழுதியிருக்கும் விடயத்தை முறைப்படி அறிவிப்பதற்காக பார்மீனியோ மற்றும் அமைச்சர்களை அழைத்தார் மன்னர் பிலிப்.

என் மகன் என்பதற்காக அந்தப் பதவிகள் அலெக்சாண்டருக்குத் தரப்படவில்லை. முழுக்க முழுக்க தகுதி, திறமை அடிப்படையிலேயே கொடுத்தேன்.

அதற்காகவே அலெக்சாண்டரை அரிஸ்ரோட்டில் போன்ற மேதைகளிடம் பயிற்சி பெற அனுப்பி வைத்தேன். அரிஸ்ரோட்டிலிடம் ஆசி பெற்றுக்கொண்டு அகாடமியில் இருந்து விடைபெற்றார் அலெக்சாண்டர்.

அரண்மனைக்கு வந்த அலெக்சாண்டர் சில நாட்களிலேயே இரண்டு பதவிகளையும் ஏற்றான்... ம்ஹூம்... ஏற்றார். மகனுக்குப் பொறுப்புக் கொடுத்துவிட்டு ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் போர்க்களத்திலேயே இருந்தார் மன்னர் பிலிப்.

எப்போது பார்த்தாலும் போர், யுத்தம், சண்டை என்று பிலிப் இருந்ததால் அலெக்சாண்டரின் கவனம் ஆட்சி நிர்வாகத்தின் மீது திரும்பியது.

(தொடரும்)

என்னுடைய அனைத்து வெற்றிகளுக்கும் அடிப்படையாக இருந்தது, என்னால் வெற்றி பெற முடியும்! என்ற மந்திரச் சொல்தான். – முகமது அலி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனாச் சோதனையிலும் மாணவர்களின் சாதனை

2020ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றைய தினம் வெளியாகியுள்ளன.

2020ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய அத்தனை மாணவர்களும் பரீட்சைச் சுமையுடன் கொரோனாத் தொற்றுப் பரவுகையால் ஏற்பட்ட கஷ்டமான நிலைமைகளையும் எதிர்கொண்டனர்.

வழமையில் ஆகஸ்ட் மாதத்தின் முதல் வாரத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடப்பது வழமையாயினும் கொரோனாத் தொற்றுக் காரணமாக குறித்த பரீட்சை ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதியே நடைபெற்றது.

ஆக, இரண்டு மாதங்கள் கடந்து பரீட்சை நடைபெற்றதனால் தரம் 5 மாணவர்களும் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் பெற்றோர்களும் கற்றலில் கடுமையாக உழைத்தனர்.

எனினும் மத்திய கல்வி அமைச்சு பரீட்சையை நடத்தி முடிப்பது என எடுத்த தீர்மானம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மிகுந்த மனநிறைவைத் தந்திருந்தது.

அதேநேரம் பரீட்சைப் பெறுபேறுகளும் தாமதமின்றி ஒரு மாத காலத்தில் வெளியிடப்பட்டமையும் சிறப்பான நடவடிக்கையாகும்.

இவை ஒருபுறமிருக்க, தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் கணிசமான சாதனை படைத்திருப்பதை பாராட்டாமல் இருக்க முடியாது.

அதிலும் குறிப்பாக கிராமப் பாடசாலை மாணவர்கள் பெற்ற பரீட்சைப் பெறுபேறுகள் அனைவரையும் பிரமிக்க வைக்கும் அளவில் மிக உன்னதப் பெறுபேறுகளாக இருப்பது பெரும் சாதனை எனலாம்.

இங்குதான் மாணவர்கள், அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலைச் சமூகம், மாகாணம், வலயம், கோட்டம் என்ற அனைத்துத் தரப்பினரதும் அர்ப்பணிப்புடன் கூடிய வகிபங்கின் பெறுமதி உணரப்படுகிறது.

இவ்வுயரிய வகிபங்கை வழங்கிய அனைவரும் பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள்.

சுருங்கக்கூறின் உலகம் முழுவதையும் உலுக்கி நிற்கும் கொரோனாத் தொற்றின் கோரதாண்டவத்திலும் தரம் 5 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்தனர் எனில், அதற்கு கல்வி மீது நம்மவர்கள் கொண்ட காத்திரமான பற்றுறுதியே காரணம் எனலாம்.

அதேவேளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையானது இரண்டு மாதங்கள் பிந்தி நடத்தப்பட்டதனால் மாணவர்கள் கற்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது என்றும் அதனால் மாணவர்கள் சாதனைமிக்க பெறுபேறுகளைப் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தது என்றும் யாரேனும் கருத்துரைத்தால்; அதனையும் அடியோடு நிராகரிக்க முடியாது.

ஆகவே இனிவரும் காலங்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை ஒக்ரோபர் மாதத்தில் நடத்துவது பொருத்தம் என்ற முடிவு எட்டப்பட்டால், காலம் நமக்குக் கற்றுத் தந்த நல்லதொரு பாடம் என்றே கருத வேண்டும்.

### கொரோனா சூழ்நிலை காரணமாக

# யாழ். போதனாவில் நோயாளர்களை பார்வையிட வருவோருக்கு இறுக்கமான கட்டுப்பாடு

## பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடுவதற்காக பாஸ் நடைமுறை இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும் நிலையில் நோயாளர்களை பார்வையிட வருவோர் அதனை பின்பற்றுமாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் பாஸ் இல்லாமல் நோயாளர்களைப் பார்வையிட வந்தோர் வைத்தியசாலைக்கு வெளியில் பல மணிநேரம் கால்கடுக்க காத்து நின்ற சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக நோயாளரை பார்க்க வந்தவர்கள் கருத்து தெரிவிக்கையில் முன்பு நோயாளர்களை பார்வையிட பாஸ் வைத்திருப்போரை அனுமதித்த பின்னர் பாஸ் இல்லாதவர்களையும் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின்னர் அனுமதிக்கும் வழமை காணப்பட்டது.

தற்போது அந்த நடைமுறையில்லை என பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். தூர இடங்களிலிருந்து நோயாளர்களை பார்க்க வருபவர்கள் நோயாளருடன் தங்கியிருந்த உறவினர் வீடு சென்றதால் தம்மால் உரியஅனுமதிஅட்டையை (பாஸ்) பெற முடியாமல் போய் விட்டது எனவும் இதேவேளை தூர இடங்களில் இருந்து வரும் தங்களை பாதுகாப்பு கடமையில் உள்ள சில ஊழியர்கள் மரியாதை இன்றி தரக்குறைவாக பேசுவதாகவும் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளர் கருத்து தெரிவிக்கும்போது கொரோனா சூழ்நிலை காரணமாக நோயாளர்களைப் பார்வையிடுவோரை மட்டுப்படுத்துவதற்காக பாஸ் நடைமுறை இறுக்கமாக பார்க்கப்படுவதாகவும் இதற்கு நோயாளர்களை பார்வையிட வருவோர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ம-3)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சதுர்த்தி உற்சவமும் கொரோனா நோயில் இருந்து உலக மக்கள் நலம் பெற வேண்டி மஹா மிருத்யுஞ்ஜய ஹோமமும் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு ஸ்நபன அபிஷேகம், மஹா மிருத்யுஞ்ஜய ஹோமமும் நடைபெற்று தொடர்ந்து மூலமூர்த்திப் பூஜை , வசந்த மண்டபப் பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருதலும் நோய்த் தாக்கத்தில் இருந்து மக்கள் நலம்பெற விஷேட பிரார்த்தனையும் நெய் தீபம் ஏற்றுதலும் நடைபெறும்.

நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகளின் பிரார்த்தனையும் நடைபெறும்.

அனைத்து வழிபாடுகளும் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** குடாகச்சகொடிய கிராமம், மூன்றுமுறிப்பு கிராமம், ஜோசப் இராணுவ படை முகாம், **SF HQ Vanni,** விமானப் படை முகாம், விமானப் படை முகாம் றேடார் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட மணல் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. குறித்த ஏல விற்பனை எதிர்வரும் 21.11.2020 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

**“பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற் கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதைவிட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது.”**
**-மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)**

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## தடைகளைத் தகர்க்கும் வழி

❖ பொறாமையும், ஒன்று கூடி உழைக்க இயலாமையும் அடிமைகளின் இயல்புகள். அவற்றை உதறியெறிய வேண்டும்.

❖ பரபரப்பு தேவையில்லை, சுறுசுறுப்பு எப்போதும் உன்னிடம் இருக்கட்டும். தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை.

❖ இறைவன் வரம்பு கடந்த பெருமைகளை உடையவன், தூய்மையான மனத்தைப் பெறுவதுடன் இறைவன் மீது நம்பிக்கையும் கொள்ள வேண்டும். அவனையே எப்போதும் சார்ந்து, நன்னெறியில் நின்றால் எதனாலும் உன்னை வெல்ல முடியாது.

❖ கொடுப்பதற்காக கையை இறைவன் படைத்துள்ளான். பட்டினியாய்க் கிடக்க நேர்ந்தாலும், உன்னிடம் உள்ள கடைசிப் பருக்கையையும் பிறருக்கு வழங்கவேண்டும். அவ்வாறு பிறருக்கு வழங்குவதால், நீ பூரணமடைவதுடன் தெய்வமாகவும் மாற முடியும்.

❖ தெளிந்த உண்மையும், கருத்துத் தூய்மையும் வெற்றியளிப்பது உறுதி. இவ்விரண்டையும் படைக்கலனாகக் கொள்ளும் எவரும் எத்தடையையும் எதிர்த்து வெற்றி பெறுவதும் உறுதி.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 15.11.2020-13.11.2021

## பதினொராம் இடத்தில் குரு பகவான்; பார்க்கும் தொழிலில் இலாபம் உண்டு!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**மீன இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 15.11.2020 அன்று 11 ஆம் இடமான இலாப ஸ்தானத்திற்கு வருகின்றார். எனவே தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். இலாபம் எதிர்பார்த்ததைப் போல வந்து சேரும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களும் ஒருசிலருக்கு நிறைவேறும். உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். உடன்பிறந்தவர்களோடு நல்லுறவு ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிலிருந்தபடியே தனித்து தொழில் செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

அதிகார வர்க்கத்தினர்களின் ஆதரவோடு புதிய முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். வெளிநாட்டில் வாழும் உறவினர்கள் மூலம் அனுகூலத் தகவல் வரலாம்.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக, உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களை குரு பகவான் பார்க்கின்றார். குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் பதிவதால் தைரிய ஸ்தானம் புனிதமடைகின்றது.

துணிந்து சில முடிவுகளை எடுத்து உறவினர்களை ஆச்சரியப்படுத்துவீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். அடகு வைத்த தங்க நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள். தொழிலை விரிவு செய்யும் முயற்சி பலன் தரும்.

நீண்ட நாட்களாக விலகியிருந்த உடன்பிறப்புகள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். அதன்மூலம் பாகப்பிரிவினையை சுமுகமாக முடித்துக்கொள்ள வழிபிறக்கும்.

குருவின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம்பெறுகிறது. எனவே பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய யோகங்கள் அனைத்தும் வரப்போகின்றது.

சண்டை போட்ட உறவினர்கள் சமாதானம் அடைவர். நீடித்த நோய் அகலும். தாய்வழி அனுகூலமும், ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் மேற்படிப்பு, சம்பந்தமாகவோ, கல்யாணம் சம்பந்தமாகவோ எடுக்கும் முயற்சிகள் பலன் தரும் நேரமிது.

குருவின் பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால் களத்திர ஸ்தானம் புனிதமடைகின்றது. இல்லற வாழ்க்கை இனிமையாக அமையும். தம்பதியர்களுக்குள் ஏற்பட்ட பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும். வாழ்க்கைத் துணைக்கு படிப்புக்கேற்ற வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

தொழில் வளர்ச்சி சிறப்பாகவே இருக்கும். சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அது கைகூடும். வெளிநாட்டிலிருந்து அனுகூலத் தகவல் கிடைக்கும். தொழிலில் பழைய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல்கள் கிடைக்கும்.

**நட்சத்திரப் பாதசாரப் பலன்கள்**

**உத்தராடம் நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் குரு சஞ்சாரம் (15.11.2020 முதல் 04.01.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சூரியன். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டும். விரயங்கள் அதிகரிக்கும். முடிவிற்கு வந்த பிரச்சினைகள் கூட மீண்டும் தலை தூக்கலாம். தொழில் ரீதியாக பெரும் தொகையைக் கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் வரலாம். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் திறமையைக் கண்டுகொள்ள மாட்டார்கள். அதிரடியாக இடமாற்றங்கள் வரலாம். அருகில் இருப்பவர்களிடம் உங்கள் முன்னேற்றத்தை முன்கூட்டியே சொல்வதன் மூலம் காரியங்களில் தாமதம் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் உண்டு.

**திருவோணம் நட்சத்திரக்காலில் சந்திரன் சாரத்தில் குரு சஞ்சாரம் (05.01. 2021 முதல் 01.03.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்திற்கு அதிபதியானவர், சந்திரன். பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான சந்திரன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, தொட்டது துலங்கும். தொல்லைகள் அகலும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு வியப்பர்.

பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடிந்து பூர்வீக சொத்துக்களை முறையாகப் பெற்றாலும், அவற்றில் ஒரு பகுதியைக் கொடுத்துவிட்டுப் புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தடைப்பட்ட பதவிகள் தானாக வந்துசேரும்.

உயர் அதிகாரிகளின் கெடுபிடி குறையும். உங்கள் திறமையைக் கண்டு சக பணியாளர்கள்வியப்பர். வீடு, வாகனம்வாங்கும்முயற்சி கைகூடும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவிகள் கிடைக்கும்.




**அவிட்டம் நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (02.03.2021 முதல் 04.04.2021 வரை, மீண்டும் 14.09.2021 முதல் 13.11.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அற்புதமான பலன்கள் வந்து சேரும். இக்காலத்தை ஒரு பொற்காலமாகக் கருதலாம். பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும். தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும்.

புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரலாம். என்றைக்கோ மலிவு விலையில் வாங்கிப்போட்ட சொத்துக்கள் இப்பொழுது விலை உயரும். அதை விற்பனை செய்து வந்த தொகையை மேலும் முதலீடு செய்ய முன்வருவீர்கள். ஆரோக்கியம் சீராவதோடு அன்றாடப் பணிகளையும் சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். விவசாயம், கால்நடை வளர்ப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு. உங்கள் தகுதிக்கேற்ற நல்ல வேலை கிடைக்கலாம்.

**அவிட்டம் மற்றும் சதயம் நட்சத்திரக்காலில் செவ்வாய் மற்றும் ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (05.04.2021 முதல் 13.09.2021 வரை)**

இக்காலத்தில் கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கின்றார். அப்பொழுது அவரது பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகின்றது. அப்பொழுது சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். இருப்பினும் செலவுகள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். சில நேரங்களில் வீண் விரயங்களையும் சந்திப்பீர்கள். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. வெளிநாட்டுத் தொடர்பால் எதிர்பார்த்த நல்ல தகவல் உண்டு. இருப்பினும் 12-ம் இடத்தில் குரு சஞ்சரிப்பதால் இனம் புரியாத கவலை மேலோங்கும்.

எதையும் தீர்மானமாக செய்ய இயலாது. திட்டமிட்ட காரியங்களை திடீர், திடீரென மாற்ற நேரிடும். உத்தியோகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. நீண்ட தூரத்திற்கான இடமாறுதல்கள் ஒரு சிலருக்கு கிடைக்கும். போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் கிடைக்கும் நேரமிது.

**குருவின் வக்கிர இயக்கம்**

16.06.2021 முதல் 13.10.2021 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். மகரம், கும்பம் ஆகிய இரண்டு இராசிகளிலும் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிநாதனாக விளங்கும் குரு வக்கிரம் பெறுவதால், இக்காலத்தில் ஆரோக்கியத்தில் குறைபாடுகள் வரலாம். உடலில் சிறு தொல்லை வந்தாலும் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவதே நல்லது.

அக்கம், பக்கத்தில் உள்ளவர்களை அனுசரித்துக் கொண்டால்தான் ஆதாயம் கிடைக்கும். குடும்ப இரகசியங்களையும், தொழில் வளர்ச்சியையும் மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். அதே நேரத்தில் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் குரு என்பதால், ஒருசில நன்மைகளையும் குரு பகவான் செய்வார். பெற்றோர் வழி ஆதரவு உண்டு. உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் குரு பகவான் படம் வைத்து, அருகில் பஞ்சமுக விளக்கேற்றி, குரு கவச பாராயணம் செய்து வருவது நல்லது. செவ்வாய்க் கிழமை தோறும் வள்ளி மணாளனை வழிபட்டால் வளர்ச்சி அதிகரிக்கும். குல தெய்வ வழிபாடும் பலன் தரும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்தக் குருப்பெயர்ச்சி பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. பகையான உறவு நட்பாகும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். சகோதரர்களின் பாச மழையில் நனையப் போகிறீர்கள். தாயின் உடல்நலம் சீராகும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு இப்பொழுது கிடைக்கும். குருவின் வக்கிர காலத்தில் மட்டும் கொஞ்சம் கூடுதலான விரயம் ஏற்படும்.

(முற்றும்)

## மழையுடனான...

அறிவித்துள்ளது.

வடக்கு, வட மத்திய, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-3)

## 10 மாணவர்...

கள மொழி மூலமாக பரீட்சைக்குத் தோற்றியவர்கள்.

புலமைப்பரிசில் பரீட்சை வரலாற்றில் முதன்முறையாக 10 மாணவர்கள் 200 புள்ளிகளைப் பெற்றுள்ளனர். (ம-3)

## வடக்குக்கு...

வேண்டுமாயின் இறுதிச்சடங்கு நடைபெறவுள்ள பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரியின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

குறித்த அனுமதியை வழங்குவதற்காக இறந்தவரின் விபரங்கள், இறப்பு ஏற்பட்ட வைத்தியசாலை அல்லது இடம் போன்ற விபரங்கள் சுகாதார வைத்திய அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இறப்பு ஏற்பட்ட வைத்தியசாலையைத் தொடர்புகொண்டு கொரோனா தொற்றினால் இறப்பு ஏற்பட்டதா? என்பதை உறுதிப்படுத்திக் கொண்டே அனுமதி வழங்கப்படும் என ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் உடல் மின்சார தகன இயந்திரத்திலேயே எரியூட்டப்பட வேண்டும் எனவும், உடலம் வீட்டிற்கு கொண்டு வரப்பட்டு ஆகக் கூடியது 3 மணித்தியாலம் மட்டுமே வீட்டில் வைத்திருக்க அனுமதிக்கப்படும் என தெரிவித்துள்ள ஆ.கேதீஸ்வரன், குடும்பத்தினர் மட்டுமே இறுதிச் சடங்கில் பங்குபற்றலாம் எனவும் அவர்கள் அனைவரும் 2 வாரங்களுக்கு தனிமைப்படுத்தப்படுவர் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3,33)

## மாவீரர் நாளை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

"கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறையில் உள்ளது. மக்கள் ஒன்றுகூடுவது தொடர்பில் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி நடைமுறைகளை மீறி ஏனையோரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பொதுவெளியில் எவராவது செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகப் பொலிஸாரால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

போரில் மரணித்த சாதாரண மக்களை நினைவுகூருவதற்கான உரிமை அவர்களின் உறவினர்களுக்கு இருக்கின்றது. அதனை வீட்டில் இருந்து செய்யலாம்.

ஆனால், பயங்கரவாத அமைப்பில் இருந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்திவிட்டு உயிரிழந்தவர்களை அதுவும் பொதுவெளியில் குழுக்களாக இணைந்து நினைவுகூருவது ஏற்புடைய நடவடிக்கையாக இருக்காது. உலகில் எந்தவொரு நாடும் இதற்கு அனுமதி வழங்காது.

எனவே, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையிலும், அவ்வமைப்புக்குப் பரப்புரை செய்யும் நோக்கிலும் பொதுவெளியில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்படுமானால் - சுகாதாரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுமானால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தனிமைப்படுத்த...

தடைவிதிக்கப்பட்ட சமயத்தில், அங்கிருந்து வெளியேறிய ஒருவரை பொதுமக்கள் பிடித்து, பொலித்தீனால் சுற்றி பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பகுதியை சேர்ந்த ஒருவர், தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறி மேல் மாகாணத்தை விட்டு வெளியேறி வலஸ்முல்ல பகுதியிலுள்ள உறவினர் வீடொன்றிற்கு சென்றுள்ளார்.

வலஸ்முல்லவில் உள்ள போவல பகுதியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்துள்ளார். இதை அறிந்த கிராமவாசிகள் அங்கு சென்று அவரிடம் வினவியுள்ளனர். எனினும் அவர் தப்பியோட முயன்றார்.

அவரை பிடித்த கிராம மக்கள் கயிற்றினால் கட்டி வைத்துள்ளனர். அவரது முகத்தை பொலித்தீன் கவர் மூலம் மூடியுள்ளனர்.

அவரை கைது செய்த பொலிஸார், பி.சி.ஆர் பரிசோதனைக்காக வலஸ்முல்ல ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். (ம-3)

## கொரோனாவால்...

உயிரிழந்தோர் எண்ணிக்கை 61ஆக அதிகரித்துள்ளது.

மினுவாங்கொட - பேலியகொட கொரோனா பரவல் கொத்தணியை அடுத்து கடந்த 6 வாரங்களில் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.

மொரட்டுவவில் வசிக்கும் 81 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் காலமானார். அவரது உயிரிழப்புக்கு நீரிழிவு நோய் மற்றும் கோவிட் - 19 நோய்த் தொற்றுக் காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு-10இல் வசிக்கும் 70 வயதுடைய ஆண் ஒருவர் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

அவரது உயிரிழப்புக்கு நீண்டகால சிறுநீரக நோய் மற்றும் கோவிட்-19 நோய்த் தொற்றுக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு-13இல் வசிக்கும் 75 வயதுடைய ஆண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

அவரது உயிரிழப்புக்கு அதிகரித்த நீரிழிவு நோய் மற்றும் இதய வியாதி மற்றும் கோவிட்-19 நோய்த் தொற்றுக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வவுனியாவில்...

நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்ட வவுனியா பம்பைமடுவைச் சேர்ந்த பெண் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவரிடம் பெறப்பட்ட மாதிரிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## இலங்கையின்...

நூல் நேற்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பௌத்த சாசன செயலணி மற்றும் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி மஹா சங்கத்தினரால் பிரதமரின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் வைத்து இந்நூல் பிரதமரிடம் வழங்கப்பட்டது.

அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தின், தேசியக் கொள்கை திட்டமிடல் குழு, சட்டம், அரச நிர்வாகம், தேசிய பாதுகாப்பு மற்றும் சர்வதேச கொள்கை துணைக் குழுவினால் இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## நாட்...

+382 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறுதொற்று கண்டறியப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கெனவே தொற்று கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின்மொத்த எண்ணிக்கை 17 ஆயிரத்து 669 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## அலுவலகத்...

கள் திணைக்களத்தின் அலுவலகத் திற்குள்ளிருந்து இரவு நேர காவலாளி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பூதர்மட சந்தியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட சமூக சேவைகள் திணைக் களம் நேற்றுக் காலை வழக்கம் போல திறக்கப்படவில்லை. அலுவலக பணியாளர்கள் அனைவரும் வீதியிலேயே காத்திருந்தனர்.

இரவு நேர காவலாளி அதிகாலையிலேயே கதவை திறந்து, காலையில் கடமையை கையளிப்பது வழக்கம். நேற்று அவரை காணவில்லையென்றதும் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

பொலிஸார் நடத்திய சோதனையில், பூட்டப்பட்ட அலுவலகத்தின் உள்ளே காவலாளி உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

இதில் தம்பாலை அச்சுவேலியைச் சேர்ந்த சி.ரகுநாதன் (வயது-54) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## பாராளுமன்றத்...

களுக்காக 2.678 ரில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும் முன்மொழிவுடன் இன்று பாராளுமன்றில் முன்வைக்கப்படுகிறது.

பிரதமரும் நிதியமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ, 2021 நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பை இன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளார். (ம-3)

தன நிதானய
திகதி - 16/11/2020 சீட்டிழுப்பு இலக்கம் - 345
Y 19 42 45 77
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
ஆயிரம் முறை 1 8 3 5

மஹஜன சம்பத
திகதி 2020/11/16
சீட்டிழுப்பு இலக்கம் 4308
C 5 9 6 9 6 4
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2603
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 04 08 32 56
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0675
S 20 01 17 66 68

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: திங்கள்
சீட்டிழுப்பு இல: 1104
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020-11-16
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 84,279,280/-
வெற்றி இலக்கங்கள் 11 39 47 77 Y
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா
கிழமை: திங்கள்
சீட்டிழுப்பு இல.: 3434
வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020-11-16
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,326,550.40
வெற்றி இலக்கங்கள் 31 36 38 53 X
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 3273
அபிவிருத்தி லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1278 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 16.11.2020 தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
O 07 49 57 58
SUPER 500 6 3 2 8
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
சுப்பர் ஜக்பொட் 22,28,147/=
வெற்றி இலக்கங்கள் 22 37 40 41
விருச்சிகம்
திகதி: 16.11.2020
வெற்றி வாரம்: 2985
வர்ணம்: மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,222,760

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1707
சீட்டிழுப்பு திகதி 16/11/2020
வெற்றி இலக்கங்கள் 22 41 42 69 ஆங்கில எழுத்து C
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 55,967,328
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம், மண்டான் கரணவாயில் அமைந்துள்ள பண்ணையுடன் கூடிய தோட்டத்தில் வேலை செய்யக் கூடிய ஆள் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. 35 - 50 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : இராசதுரை (ஜேர்மனி)
Viber : 004917641065227,
004901630081656
பிரதீஸ் (இலங்கை) : 076 417 2003
(C-698)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### ஜோதிடம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
(C-689)
தொடர்பு - 077 572 9724

### விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-505)

Physics & Chemistry
Personal & Group Classes
2021, 2022 & Repeat Batches
076 322 0916
(4660)


## கொரோனா தடுப்பூசி தயார்

(கொழும்பு)

அமெரிக்க நிறுவனமான மாடர்னா தயாரித்துள்ள கொரோனா தடுப்பூசி நோய்த் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க 94.5 சதவிகிதம்செயற்திறனுடன் செயல்படுவதாக அந்நிறுவனம் தெரிவித் துள்ளது.

3ஆம் கட்டமாக நடந்த கடைசிசோதனை முயற்சியின் இடைக்கால முடிவுகளின் அடிப்படையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசி, நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பதில் 92 சதவிகிதம் பயன்திறனுடன் செயல்படுவதாக கடந்த வாரம் அறிவிக்கப்பட்டது.

(ம-03)

# மரண அறிவித்தல்

## இராசமாணிக்கம் நாகேந்திரன்



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசமாணிக்கம் நாகேந்திரன் நேற்று (16.11.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் நெனியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (4661)

வேரக்கேணி வீதி.
மட்டுவில் தெற்கு. சாவகச்சேரி.
076 023 0615
077 991 2341
தகவல்:-
குடும்பத்தினர்


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய், உடுவில் றோட்டுடன் ஆனந்த வைரவ கோவில் சந்தி அருகாமையில் இரண்டு பரப்பு (2 பரப்பு) காணி உள்ளது. மற்றும் நல்ல நிலையில் உள்ள 3 பரப்புக் காணியுடன் வீடும் உள்ளது.

( தரகர் தேவையில்லை )
(4663)
குரு : 077 805 1655, 076 640 0974

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ராச வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்துக் கொடுக்கப்படும்.

கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் 1 1/2 பரப்புக் காணி உண்டு.

( தரகர் தேவையில்லை. )
(4663)
077 288 0152
074 075 4204


# மரண அறிவித்தல்



## திருமதி சரஸ்வதி இராமலிங்கம்

### ( உடுவில் தெற்கு )

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இராமலிங்கம் நேற்று (16.11.2020) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிற்றம்பலம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருகளும் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாணிக்கம், நடராசா மற்றும் கந்தசாமி, பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலாவதி (சுவிஸ்), கலாறஞ்சன் (சுவிஸ்), கலாமோகன் (சுவிஸ்), கலாரூபன் (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்), காலஞ்சென்ற கலாநாதன் மற்றும் கலாநிதி (இலண்டன்), சிவகரன் (உதவிப் பிரதேச செயலாளர் - பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயும் இராஜசிங்கம், லிங்கேஸ்வரி, சிவாணி, செல்வகுமாரி, சத்தியபாமா, மாலினி, சிவகுமார், ஜெயவாணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நல்லூர் ) ஆகியோரின் அன்பு மாமியும் நிரோன் - தாரா, நிரேஸ் - சயங்கரி, நிவேத் - சாரா, சதீபன் - ஆரபி, ரமணன், சேயோன், மகிஷா, அனுஷா, விதுஷன், மிதுனன், கபிலன், கிஷானி, கிஷான், ராகவி, சாருதா, கேஷாயினி, அபிஷேகனி, அச்சுதன், லக்ஷாயினி, அம்சவி, அக்சரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆஜேஸ், ஆரியா, லேயன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

15/1, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
021 222 1073
076 172 5533
(4662)
தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.